சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2008
ஆனி 26
றஜபு பிறை 22
ஞாயிறு (10-7-1977)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 12
தொலைபேசி: 23411
விலை சதம் 60

# தனிநாடு ஒன்றே குறிக்கோள்!

# வேறுபேச்சுக்கு இனிஇடமில்லை!

## சோவியத் பிரதமருக்கும், அமெரிக்க ஜனதிபதிக்கும் தமிழர் நிலைகுறித்து ஈழத்தமிழர் கழகம் மகஜர்!

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைப்பற்றி ஈழத்தமிழர் கழகம் ருசியாவின் பிரதம மந்திரிக்கு விரிவான ஒரு மகஜரை அனுப்பியுள்ளது. அம்மகஜரில் ஈழத்தமிழர்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டு இரண்டாநதரப் பிரசைகளாக நடத்தப்படுவதையும், தோட்டத் தொழிலாளர்கள் தமிழர்களாய் இருப்பதன் காரணமாக, இலங்கை ஆட்சியாளர்களின் கெடுபிடிக்கு ஆளாகி, வாக்குரிமை இழந்து நாடற்ற பிரசைகளாக்கப்பட்டு, பசி பட்டினிக்கு உள்ளாக்கப்பட்டு, வாட்டி வதைக்கப்படும் கொடுமையையும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

ஈழத் தமிழகம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமேலாக தனிநாடாக இருந்த வரலாற்றையும், பின்பு எவ்வாறு தனது தனித்துவத்தை இழந்தது என்பதையும்,இன்றைய ஈழத் தமிழ் இளைஞர்கள் கடந்த இருபத்தைந்து ஆண்டுகாலமாக தமக்கு சிங்கள ஆட்சியாளர்களால் இழைக்கப்பட்டுவரும் அநீதிகளை இனியும் பொறுத்திருந்து பார்க்கமுடியாத நிலையில் தனிநாடு பெற போராட்டத்தில் இறங்கி விட்டார்கள் என்றும் இனி இலங்கை அரசின் ஆட்சிக்கு வரும் எவருடனும் தனிநாட்டைத் தவிர்ந்த வேறெந்த பேச்சுவார்த்தைக்கும் இடமில்லையென்றும் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதே வேளையில் அமெரிக்க ஜனதிபதி கார்ட்டருக்கு ஈழத் தமிழர் கழகம் எழுதிய கடிதத்தில் உலகில் எந்த மூலையில் வாழும் மக்களாயிருந்தாலும் அவர்களின் அடிப்படை உரிமைகளுக்காக குரல் கொடுப்பேன் என்று கூறிக்கொள்ளும் தாங்கள் இலங்கைத் தமிழர்களின் மனித உரிமைகள் பறிக்கப்படுவதைப்பற்றி மௌனமாயிருக்கின்றீர்களே என்று கேட்டிருக்கிறது.

## கிளிநொச்சியில் பூரண பகிஷ்கரிப்பு!

கிளிநொச்சியில் புதிய நகர மண்டபம், மக்கள் சந்தை திறப்புவிழா என்ற போர்வையில் நடைபெற்ற குமாரசூரியரின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை கிளிநொச்சி மக்கள் த. வி. கூ. வேட்பாளர் அஞ்சாநெஞ்சன் திரு. வி. ஆனந்தசங்கரி அவர்களின் வேண்டுகோட்படி பரிபூரணமாகப் பகிஷ்கரித்தார்கள்.

மேற்படி கட்டடங்களை திறந்துவைக்கவும் குமாரசூரியருக்கு தேர்தல் பிரசாரம் செய்வதற்காகவும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா 2-7-77 சனிக்கிழமை கிளிநொச்சிக்கு சென்றிருந்தார். ஆனல் இவ் வேடிக்கை விழாக்களை பகிஷ்கரிக்குமாறு திரு.வி. ஆனந்தசங்கரி கிளிநொச்சி மக்களைக் கோரியிருந்தார். திரு. சங்கரியின் வேண்டுகோட்படி பொதுமக்கள் இத்தேர்தல்

—8-ம் பக்கம் பார்க்க

## உடுப்பிட்டியில் இராசலிங்கத்துக்கு மகத்தான ஆதரவு!

### சாதிவெறியர் சூழ்ச்சி முறியடிப்பு!

உடுப்பிட்டித் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடும் திரு. த. இராசலிங்கம் அவர்கள் யாவரும் அதிசயிக்கத்தக்க பெரும்பான்மை வாக்குகள் பெற்றுபெரு வெற்றியீட்டப்போவது நிச்சயமாகி விட்டது. கூட்டணியீட்ட விருக்கும் வரலாற்றுச்சாதனை மிக்க இந்த மகத்தான வெற்றியை முறியடிப்பதற்காக சாதிக் கலவரங்களை தூண்டிவிட சமூக விரோதிகள் எடுத்துவரும் சூழ்ச்சி கூட்டணி ஆதரவாளர்களால் முறியடிக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் துன்னலையில் சாதிக்கலவரத்தை தூண்டிவிடும் முயற்சியொன்று கூட்டணி எதிரிகளால் நடைபெற்று, அது முறியடிக்கப்பட்டுவிட்டது. சிறைமீண்ட இளைஞர் திரு. சந்ததியார் அதில் தலையிட்டு அமைதியை நிலைநாட்டினர்.

"இதே போல — சிறுபான்மைத் தமிழர் பிரச்சினைகளையும் அவர்களுக்கு இருக்கும் குறைகளையும் பொதுத்தேர்தல் நாளான யூலை 21க்கு முன்னர் தீர்க்கத் தயாரா என்ற விஷமத்தனமான கேள்வியுடன் ஒரு துண்டுப் பிரசுரம் விஷமிகளால்வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கு ஒரு கூட்டத்தில் பதிலளித்த தந்தைசெல்வாவின் மகன் சட்டத்தரணி திரு. சந்திரகாசன்—'சாதியொழிப்பு, தீண்டாமையொழிப்பு போன்ற நடவடிக்கைகயில் நாம் நீண்டகாலமாக ஈடுபட்டிருக்கிருேம்; தேர்தலில் வெற்றி பெறும் நோக்கத்திற்காக அல்ல, தமிழ் சமுதாயத்தை சாதியும் தீண்டாமையும் பாழடித்து சமுதாய வளர்ச்சிக்கு கேடு பயப்பதினல் அதை முற்ருக அழித்தொழிக்க கங்கணம் கட்டி நிற்கிருேம்; தேர்தலைப் பற்

—8-ம் பக்கம் பார்க்க



## சோற்றை மிதித்த சுயாட்சி நவம்!

ஒருவன் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது சப்பாத்துக் கால்களினல், அந்தச் சாப்பாட்டை மிதித்துவிட்டுச் செல்லும் இந்த மனிதரா தமிழனுக்கு தனிநாடு பெறப் போகிருர்? இவ்வாறு கடந்த 20-6-77ல் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற இரவு புகைவண்டியில் பிரயாணம் செய்தவர்கள் தமக்குள் பேசிக்கொண்டார்கள். இதுபற்றி பயணி ஒருவர் பின்வருமாறு கூறினர்.

இதே புகைவண்டியில் சுயாட்சி நவரத்தினமும் யாழ்ப்பாணம் போய்க்கொண்டிருந்தார். அவர் புகையிரத சிற்றுண்டிச்சாலைக்கு சென்றுவிட்டுத் திரும்பும்போது வழியில் (Corridor) ஒரு ஏழைத் தொழிலாளி தனது சாப்பாட்டுப் பார்சலை விரித்து வைத்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்திருக்கிருன். அந்த வழியால் வந்த நவரத்தினம், அவனது சாப்பாட்டை தனது சப்பாத்துக்காலால் மிதித்துக்கொண்டு சென்ருராம். இதற்காக அவர் வருத்தம்கூடத் தெரிவிக்கவில்லையாம்;

இதனல் ஆத்திரமடைந்த அந்த ஏழைத் தொழிலாளி, நவரத்தினத்தின் மீது பாய்ந்து அவரைத் தாக்க முயற்சிக்கவே, அங்கு பிரயாணம் செய்த தமிழ்ப் பயணிகள் சிலர் திரு. நவரத்தினத்தை அடையாளம் கண்டு, அதிலிருந்து காப்பாற்றிவிட்டதுடன், ஒரு மனிதனின் சாப்பாட்டை சப்பத்துக்காலால் மிதித்துக்கொண்டு அதற்காக வருத்தம்கூடத் தெரிவிக்காமல் மரம்போல் நிற்கும் நீரா தனிநாடு எடுத்துத் தரப் போகிறீர் என்று திட்டும் கொடுத்து அனுப்பினர்கள். இச்சம்பவம் 20-6-77 இரவு கொழும்பு—யாழ் ரயிலில் நடைபெற்றது.

இப்பொழுது விற்பனையாகிறது

1976 பெப்ரவரி திங்களில் புத்தளத்தில் இடம் பெற்ற சிங்கள — முஸ்லிம் கலவரம் பற்றிய முழு விபரங்கள் அடங்கிய நூல்;

"புத்தளத்தில் இரத்தகளம்"

எழுதியவர்: நாவண்ணன்

விலை ரூபா: 3-00, பக்கங்கள் 88.

சுதந்திரன் வெளியீட்டகத்தின் 11-வது வெளியீடு!

194, ஏ. பண்டாரநாயக விதி, கொழும்பு-12.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குத்துக்கரண வீரர் குமாரசாமி

# கட்டுப்பணம் இழப்பது உறுதி!

**தமிழினத்தின் விடுதலைப் போராட்டத் தளகர்த்தர்களில் அதி முக்கியமானவர்களில் ஒருவரும் — தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த தலைவர்களில் ஒருவரும்—தமிழர் விடுதலைப் போராட்டத்தை உலக அரங்குக்கு கொண்டுவந்து, சர்வதேச ஆதரவை தமிழ் ஈழத்தின் பால் திருப்பியவருமான கடமை வீரர் திரு. வ. ந. நவரத்தினம், சாவகச்சேரித் தொகுதியில், கூட்டணி வேட்பாளராக போட்டியிடுகிறார். அவரை எதிர்த்துப் போட்டியிடுபவர்கள் அனைவரும் கட்டுப்பணம் இழப்பது நிச்சயமாகிவிட்டது. மிகவும் அதிகப்படியான வாக்குகளினால் வெற்றிக்கொடி நாட்டவிருக்கிறார் திரு. நவரத்தினம்.**

1956 ஆண்டும் தமிழரசுக் கட்சியுடன் தம்மை இணைத்துக்கொண்டு—தமிழின விடுதலைப் போராட்டத்துக்கு தம்மை அர்ப்பணித்துவரும் நவம் அவர்கள், சாவகச்சேரி தொகுதி மக்களின் அன்புக்கும் வாஞ்சைக்கும் உரியவர். 1956 ஆனி ஐந்து அறப்போரின்போது — கொழும்பில் காலிமுகத்திடலில் சிங்களக் குண்டர்களால், வயிற்றில் மூங்கிற் தடிகொண்டு குத்தப்பட்டு குருதிகொட்டிய திரு. நவரத்தினம்—அதன்பின் இயக்கம் நடத்திய சகல போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர்.

1972ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டு—தனிநாடு இலட்சியம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், இந்த இலட்சியப் போராட்டத்துக்கு சர்வதேச ஆதரவை திரட்டித் தருவதில் கண்ணும் கருத்துமாக செயற்பட்டு வந்து அதிலே குறிப்பிடத்தக்க சாதனைகள் புரிந்தவர் திரு. நவரத்தினம். 1974ம் ஆண்டு கொழும்பில் நடந்த காமன்வெல்த் பிரதிநிதிகள் மாநாட்டில் திரு. நவரத்தினம் நிகழ்த்திய விடுதலை முழக்கம், நமது இயக்க வரலாற்றில் ஒரு பொன்னேடாகும். சர்வதேச மன்னிப்புச்சபையுடன் தொடர்பு கொண்டு தமிழ் இளைஞர்களின் விடுதலைக்கு பாடுபட்ட திரு. நவரத்தினம், தமிழ் இளைஞர்களின் நம்பிக்கைக்கும், விசுவாசத்துக்கும் உரியவர்.

கடமை வீரர் — இலட்சிய ஏந்தல் — தியாகச் செம்மல், நவரத்தினத்தை எதிர்த்துப் போட்டியிடுகிறார் குத்துக்கரணவீரர் குமாரசாமி. நிலையான கொள்கையின்றி—தெளிவான பாதையின்றி—தேர்தலுக்குத்தேர்தல் தலைகாட்டும் இந்தக் குமாரசாமி இப்போது அமரர் பொன்னம்பலத்தின் பெயரைக் கூறிக்கொண்டு — ''ஜீ. ஜீ. காங்கிரஸ்'' என்ற காளான் கட்சியின் பெயரில் சுய இச்சையாக வந்து வெட்புருடாக்களை வெடித்து திரிகிறார்.

தேர்தலுக்குத் தேர்தல் மட்டுமே தலைகாட்டும் இந்த ஆசாமி—கடந்த தேர்தலில் மக்களால் விரட்டியடிக்கப்பட்டபின்னர், ஏழு ஆண்டுகளாக அயர்ந்து தூங்கிவிட்டு இப்போது வந்து கூக்குரலிட்டு திரிகிறார். இவர் கடந்த காலத்தில் அடித்த குத்துக்கரணங்களையும் தமிழ் சமுதாயத்துக்கு செய்த[illegible]படு துரோகங்களையும் இதோ தருகிறோம்.

1947ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியை சாம்பார் கட்சியென்றும், அதன் தலைவர்களையும் நிர்வாகிகளையும் அலிபாபாவும் 40 திருடர்களும் என்றும் வர்ணித்தவர் திரு. குமாரசாமி.

இப்படி ஐக்கிய தேசியக் கட்சியை திட்டிய குமாரசாமி அதே ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துடன் ஓராண்டுக்குள் — 1948ம் ஆண்டு சங்கமமானார்,

மலைநாட்டுத் தமிழர்களை அரசியல் அநாதைகளாக்கிய இந்திய பாகிஸ்தானிய பிரசாவுரிமைச் சட்டம் வந்தபோது அச்சட்டத்தை எதிர்க்கவோ, ஆதரிக்கவோ

## கடந்த காலத்தில் அவர் நடத்திய

## அரசியல் பித்தலாட்டங்கள் இதோ!

## உதயசூரியன் நவத்தின் முன்னால்

## மின் மினிகள் எம்மாத்திரம்?

வக்கின்றி வகையின்றி என்ன செய்வதென்று தெரியாமல் ஓடி ஒளித்தவர் குமாரசாமி. அச்சட்டத்தின் இரண்டாவது வாசிப்புக்குப் பின் வாக்கெடுப்பு நடந்தபோது சட்டக்கல்லூரி சோதனை யென்று பொய்ச்சாட்டுச் சொல்லிவிட்டுப் பாராளுமன்றத்துக்கு போகாமல் விட்டவர் குமாரசாமி.

பாராளுமன்ற தேர்தல் சட்டத் திருத்தத்தை 1949ம் ஆண்டு ஆதரித்து வாக்களித்து, அப்போது வாக்குரிமை பெற்றிருந்த இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதற்கு உடந்தையாக இருந்தவர் குமாரசாமி.

சிங்கள ஏகாதிபத்தியத்தின் சின்னமான வாளேந்திய சிங்கக் கொடியை இலங்கையின் தேசியக் கொடியாக ஏற்றவர் குமாரசாமி.

கல்லோயா குடியேற்றத் திட்டத்தினால் பட்டிப்பளையாறு என்ற பழந்தமிழ்ப் பெயர் மறையவும், கிழக்கு மாகாணத்தில் அம்பாறை யென்ற சிங்களத்தொகுதி உண்டாகவும், [illegible] கந்தளாயிலும் [illegible]தின் இன்னும் சில பகுதிகளிலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடக்கவும் உதவி புரிந்து தமிழ் பிரதேசத்தை சிங்களப் பிரதேசமாக மாற்ற ஐ.தே.கட்சிக்கு உதவிபுரிந்தவர் குமாரசாமி.

ஐ. தே. கட்சியின் ஆட்சிக் காலத்தில் இரண்டாவது எலிசபெத் மகாராணியாரால் இலங்கைப் பாராளுமன்றத்தின் கூட்டத் தொடர் ஆரம்பித்து வைக்கப்பட்டபோது அச்சபையில் நிகழ்த்தப்பட்ட அரியணை உரையில் தமிழ் புறக்கணிக்கப்பட்டதைப் பார்த்துக்கொண்டுவாய்மூடி மௌனியாகி அரைமந்திரி பதவியில் அட்டைபோல ஒட்டிக் கொண்டு, பேசா மடந்தையாகி சுருண்டு கிடந்தவர் இந்தக் குமாரசாமி!

1953ம் ஆண்டு தமிழ்காங்கிரஸ் தலைவர் அமரர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களை அமைச்சர் அவையிலிருந்து சேர் ஜோன் கொத்தலாவலை வெளியேற்றி, ஈழத்தமிழ் மக்களின் முகத்திலறைந்தபோது —அதைப் பார்த்து ரசித்துக் கொண்டு—தனது தலைவரையும், தான் சார்ந்திருந்த கட்சியையும் கைகழுவி விட்டு விட்டு, அரை மந்திரி பதவியை அழுங்குப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருந்தவர்தான் இந்தக்குமாரசாமி.

1954ம் ஆண்டு திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம் யாழ்ப்பாணம் முற்றவெளிக் கூட்டத்தில், சேர். ஜோன் கொத்தலாவலை தமக்கு செய்த அநீதியை விளக்கி, யாழ்ப்பாணம் வரவிருக்கும் சேர் ஜோன் கொத்தலாவலையை வரவேற்க வேண்டாமென்று தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். அதனால் சுகவீனம் என்ற காரணத்தைக்காட்டி சேர் ஜோன் தனது யாழ்ப்பாணப் பிரயாணத்தை ஒத்தி வைத்தார். அச்செயலைப் பொறுக்க முடியாமல் ஜீ.ஜீ. [illegible] உடனடியாகப் பறந்துசென்று சேர் ஜோன் கொத்தலாவலையின் காலில் விழுந்து அவரை யாழ்ப்பாணத்துக்கு கூட்டி வந்து வரவேற்புக்கள் கொடுத்து தமிழினத்தின் முகத்திலும் ஜீ.ஜீ.யின் முகத்திலும் கரிபூசியவர் இதே குமாரசாமி.

அதே சமயத்தில் தமிழரசுக் கடசியினரோ சேர் ஜோன் வருகையை எதிர்த்து 1954-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29ம் திகதி யாழ் மாநகர சபை முன்றலில் அவருக்கு கறுப்புக் கொடி பிடித்து 'கொத்தலாவலையே திரும்பிப்போ' என்று ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

தமிழனின் மானத்தைக் கப்பலேற்றும் விதத்தில் சேர் ஜோன் கொத்தலாவலைக்கு நெடுந்தீவில் முடிசூட்டி ராஜோபசாரம் அளிக்கப்பட்ட நேரத்தில், அதை வாழ்த்தி வரவேற்றுப் பாராட்டியவர் குமாரசாமி.

1954ம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து கொண்ட குமாரசாமி, சாவகச்சேரி தொகுதியில் 19 ஐ.தே. கட்சிக் கிளைகளை அப்போது நிறுவினார்.

சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்துகொடுக்கக் கூடியதாக அரசியற் சட்டத்தை திருத்துமாறு கோரி பாராளுமன்றத்தில் டாக்டர் என். எம். பெரேரா கொண்டு வந்த பிரேரணையையும் — இதே போன்று இருமொழிகளுக்கும் சம அந்தஸ்து கோரி 24-6-55ல் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் கொண்டு வந்த பிரேரணையையும் ஆதரித்து வாக்களிக்காமல் அரை மந்திரி பதவியில் ஒட்டியிருந்தவர்—குமாரசாமி.

1956ம் ஆண்டுபெப்ரவரி 17, 18, 19ம் திகதிகளில் களனியில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி மாநாட்டில்கொண்டு வருமாறு பின்வரும் பிரேரணைகளை 23-11-77ல் அனுப்பிவைத்தார் குமாரசாமி; அப்பிரேரணை வருமாறு:-

"தமிழ்பேசும் பகுதி, சிங்களம் பேசும் பகுதி என நாட்டை இரு பகுதிகளாகப் பிரித்து இரண்டையும் காமன்வெல்த்துக்கள் சம அந்தஸ்துள்ள இரு தனி இராச்சியங்களாகவோ, அல்லது சுயநிர்ணய உரிமையுள்ள இரு தனி இராச்சியங்களைக்கொண்ட ஒரு சமஷ்டி ஆட்சிமுறையை ஏற்படுத்த வசதியளிக்கும் வகையில் நாட்டின் அரசியல் சட்டம் திருத்தியமைக்கப்பட வேண்டும்."



இந்தப் பிரேரணையை விவாதத்துக்கு எடுப்பதில்லையென ஐ.தே.கட்சி 18-1-56ல் முடிவுசெய்து அதைக் குப்பைக் கூடைக்குள் கசக்கிப் போட்டது; இதன் மூலம் குமாரசாமியின் முகத்தில் கரிபூசியது. இப்படி நடந்த பின்பும், 20-2-56 வரை பதவியை இறுகப் பற்றிக் கொண்டிருந்தவர் குமாரசாமி.

26-12-55ல் போக்குவரத்து மராமத்து மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியாக இருந்த குமாரசாமி 'தமிழ்நாடு வாலிப முன்னணி' யென்று ஒரு காளான் கட்சியை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்—மீசாலை கமலாம்பிகை வித்தியாசாலையில் — அது வெறும் புஸ்வாணமாகியது.

இதன் பின்னர் 17-2-57ல் —அதாவது 1956ல் சாவகச்சேரி தொகுதியில் தமிழ் மக்கள் இவரை முற்றாக நிராகரித்து திரு. நவரத்தினத்தை தங்கள் பிரதிநிதியாக ஏற்றுக்கொண்ட பின்னர்—அடிப்படை ஜனநாயக உரிமைகள் முன்னணியென்ற பெயரில் ஓர் அடுப்படிக் கட்சியை ஆரம்பித்தார். அதுவும் இருந்த இடம்தெரியாமல் புகைந்து மறைந்துவிட்டது.

இதற்கிடையில் 1956ம் ஆண்டு பொதுத்தேர்தலில் வெளியிடப்பட்ட ஒரு துண்டுப் பிரசுரத்தில், திரு. வி. குமாரசாமி, அரை மந்திரி பதவியிலிருந்து வெளியே வந்ததும், அவர் தமிழரசுக் கட்சியில் சேர விண்ணப்பித்ததாகவும் — அதை தமிழரசுக்கட்சி நிராகரித்துவிட்டதென்றும் — தெரிவிக்கப்பட்டிருந்தது. அதை திரு. குமாரசாமி இதுவரை எந்தக்கட்டத்திலும் மறுதலித்ததில்லை.

1956ம் ஆண்டு பாராளுமன்றத்தேர்தல் நியமன தினத்துக்கு முன்பு — தமிழ் காங்கிரஸ் கட்சியின்பொதுசபை கூட்டமென்றில் திரு. குமாரசாமியைப் பற்றி அமரர் ஜீ. ஜீ. வருமாறு அழகாகக் கூறியிருந்தார்:-

''திரு. குமாரசாமியை சாவகச்சேரி தொகுதி மக்கள்தெரிவு செய்வார்களேயானால்!- கொத்

—7-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழத்துக்கு சிங்கள அதிகாரிகளை அனுப்பும்படி கோரியவர் தேவநாயகம்!

**நான் தமிழர்களின் உரிமைகளை விட்டுக் கொடுக்கமாட்டேன்; தமிழினத்தைக் காட்டிக் கொடுக்கமாட்டேன்; சிங்களக் குடியேற்றத்தை அனுமதிக்கமாட்டேன்; என்றெல்லாம் தன்னை ஒரு பெரிய வீராதிவீரர் போலவும், சூராதி சூரர் போலவும் காட்டிக்கொண்டு கல்குடா தொகுதி மக்களுக்கு 'உறுதி மொழிகள்' வழங்கிவருகிறார் யூ.என்.பி. கட்சியின் சார்பில் அங்கு போட்டியிடும் திரு. கே. டபிள்யூ தேவநாயகம்.**

ஆனால் யார் இந்தத் தேவநாயகம்? சிங்களக்கட்சியில் ஒட்டிக்கொண்டிருக்கும் இவரால் தான் சார்ந்துள்ள அதே சிங்கள யூ. என். பி.க் கட்சியை எதிர்த்து தமிழின உரிமைகளை நிலைநாட்ட முடியுமா? அதற்கு இவருக்கு வல்லமையும், துணிவும் உண்டா? இதற்கு முன்னர் எப்போதாவது அப்படி செய்திருக்கிறாரா என்பதை ஆராயவேண்டியது கல்குடா தொகுதி மக்களின் பாரிய பொறுப்பாகும்.

காலஞ்சென்ற திரு. சு. நடேசபிள்ளை ஐக்கிய தேசியக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்; அக்கட்சியை கட்டிவளர்க்க அரும் பாடுபட்டவர்; அப்படிப்பட்டவரே, ஐக்கிய தேசியக் கட்சி சிங்களம் மட்டும் என்ற இனவெறிக் கொள்கைக்குள் 1956ம் ஆண்டு வீழ்ந்த பின்னர், அக்கட்சியினால் தமிழினத்துக்கு படுபாதகமே தவிர தினையளவும் நன்மையில்லை யென்று முடிவுகட்டி அதிலிருந்து அழுதபடியே வெளியேறிய வரலாறு நாடு அறிந்த வரலாறு.

தமிழர்களை அடிமைகளாக்கும் சிங்களம் மட்டும் கொள்கையை யூ. என். பி. ஏற்காமல் தடுப்பதற்கு அக்கட்சியுடன் எவ்வளவோ போராடிப்பார்த்தும், முடியாமல் அழுத கண்களுடன் ஆனைப்பட்ட நடேச பிள்ளையே வெளியேறி விட்டார் என்றால் — யூ. என். பியிடம் தமிழர் உரிமைக்கு சண்டை போட இந்த தேவநாயகத்தினலாமுடியும்?

யூ. என். பி.யினால், ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கை சிங்களம் மட்டும்; தமிழினத்துக்கு விரோதமான இந்த இனவெறிக்கொள்கையை ஏற்றுக்கொண்டுதான் அக்கட்சியில் இருந்து வருகிறார் திரு. தேவநாயகம் இதை அவர் மறுக்கமுடியுமா?

தமிழ்பேசும் மக்களின் பிரதேசத்தில்—வரண்ட பிரதேச அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு — வெளியிடங்களிலிருந்து சிங்களவர்களைக்கொண்டு வந்து குடியேற்றுவது யூ. என். பி. கட்சியின் கொள்கை; குடியேற்றத் திட்டத்தின் மூலவர்கள் யூ. என். பி.க் கட்சியினர். இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டு தானே அக்கட்சியில் இருந்து வருகிறார் திரு. தேவநாயகம்.

தமிழ் பிரதேசத்தில் சிங்களவரைக் குடியேற்றுவது யூ. என். பி.யின் கொள்கையில்லையென்று தேவநாயகம் கூறுவாரானால்—தமது தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தனவைக் கொண்டு அப்படி ஒரு அறிக்கையை தேர்தலுக்கு முன்னர் வெளியிடச் செய்ய திரு. தேவநாயகத்தினால் முடியுமா?

பௌத்தத்துக்கு முதலிடம் தந்தால் மட்டும் போதாது; அது அரசாங்க மதமாக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசியல் நிர்ணய சபையில் பிரேரணை கொண்டு வந்தபோது — அதைக் கொண்டுவராமல் தடுத்து நிறுத்த திரு. தேவநாயகத்தால் முடிந்ததா? முடியவில்லையே! இப்படிப்பட்டவரால், தமிழின உரிமைகளை ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து எதிர்காலத்தில் எப்படி பெற முடியும்?

தமிழினத்தின் மொழி உரிமைகளை அரசியல் சட்டத்தில் சேர்ப்பதற்காக அரசியல் நிர்ணய சபையில் தமிழ் பிரதிநிதிகள் கொண்டுவந்த பிரேரணைகள் அனைத்தையும் யூ. என். பி. கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து தோற்கடித்ததே—திரு. தேவநாயகத்தினால் அப்போது என்ன செய்யமுடிந்தது? தமது கட்சியினரை தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்கும்படி செய்ய முடிந்ததா?

1970ம் ஆண்டு முதலாவது அரியணை உரையின்போது தமிழ் வடக்கு கிழக்கு மாகாணங்களின் நீதிமன்றமொழியாக வேண்டுமென்றும், தமிழே தமிழ் பிள்ளைகளின் போதனாமொழியாக இருக்க வேண்டுமென்றும் திருத்தப் பிரேரணை கொண்டுவந்திருந்தது தமிழரசுக் கட்சி.

அப்போது, அப் பிரேரணைகளை எதிர்க்கட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சியும் அரசுடன் சேர்ந்து எதிர்த்து வாக்களித்தது. அந்த வாக்களிப்பு நடைபெற்ற சமயம், சபையில் இருந்தால், தமிழரசுக் கட்சியின் [illegible] மொழியுரிமை கோரிக்கைகளை ஆதரிக்கவேண்டிவரும்; அப்படி ஆதரித்தால், தாம் சார்ந்திருக்கும் யூ. என். பிக் கட்சிக்கு கோபம் வந்து விடும் என்று பயந்து வாக்களிப்பு சமயத்தில் சபையிலிருந்து கோழைத்தனமாக நழுவி விட்ட தேவநாயகமா யூ. ன். பியுடன் சண்டைபோட்டு உரிமைகளைப் பெறப்போகிறார்?

தமிழினத்தின் உரிமைகளைப் பேணுவதிலும் பாதுகாப்பதிலும திரு. தேவநாயகம் இதற்கு முன்னர் எவ்வளவு தூரம் பாடுபட்டிருக்கிறார் என்பதை தமிழினம் எண்ணிப்பார்த்திட வேண்டும்!

கிழக்கு மாகாணத்தில் அரசாங்க உயர்பதவிகளில் இருக்கின்ற தமிழர்களை அந்த இடங்களிலிருந்து அகற்றிவிட்டு, அவற்றுக்கு சிங்களவர்களை நியமிக்க வேண்டுமென்றும், கிழக்கு மாகாணத்திற்கு சிங்கள அதிகாரிகளையே அனுப்பவேண்டுமென்றும், 1970ம் ஆண்டு முதலாவது அரியணை உரை விவாதத்தின்போது 'சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்தவர் இதே தேவநாயகம் அவர்கள்தாம் என்பதை தமிழ் சமுதாயம் மறந்துவிடக்கூடாது.

தமிழ் ஈழத்தில் மட்டக்களப்பில்— சிங்கள அதிகாரிகளை நியமிக்கும்படி கோரிக்கை விட்ட திரு. தேவநாயகமா தமிழர் உரிமைகளுக்கு போராடப் போகிறார்?

தமிழ் தேசிய இனம் தனது மரபுவழித் தாயகத்தில் இழந்த தனது அரசுரிமையையும். இறைமையையும் நிலைநாட்டித் தன்னைத் தானே ஆள ஒன்றுபட்டுப் போராடியபோது — தனது சிங்கள விசுவாசத்தைக் காட்டும் பாணியில்— பின்வருமாறு திரு. தேவநாயகம் சாய்ந்த மருதுவில் நடைபெற்ற ஐ. தே. கட்சிக் கூட்டத்தில் பேசியிருந்ததாக 'தினபதி' நாளேடு தனது 5-4-77 இதழில் பின்வருமாறு ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது.

"இந்த நாட்டைப்பெரும்பான்மையினத்தினரான சிங்களவர்களாலேயே எப்பொழுதும் ஆளமுடியும்— அவர்கள் ஆளுபவர்கள்— நாம் எல்லாம் ஆளப்படுவர்கள் — இதை எவராலும் மாற்றமுடியாது. இந்த உண்மையை இந்த நாட்டில் உள்ள தமிழர்கள் நன்கு உணரவேண்டும்!"

மேற்கண்டவாறு திரு. தேவநாயகம்பேசியதாகதினபதி செய்திவெளியிட்டிருந்தது. இச்செய்தியை இன்று வரை திரு. தேவநாயகம் மறுக்கவில்லையென்பதும், தினபதி திரு. தேவநாயகம் சார்ந்துள்ள யூ. என். பி கட்சியை ஆதரிக்கும் பத்திரிகை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதன் பொருள் என்ன?

சிங்களவன் ஆளும் இனம்; தமிழினம் ஆளப்படும் இனம்; சிங்களவர்களே ஆளவேண்டும்; தமிழர்கள் ஆளப்படவேண்டும்; சிங்களவர் எஜமானர்கள், தமிழர்கள் அடிமைகளாக வாழவேண்டியவர்கள்; இந்த நிலையை ஏற்றுக்கொண்டு தமிழர்கள் அடங்கியொடுங்கி, பயந்து பணிந்து வாழவேண்டும்; இதுதான் திரு. தேவநாயகத்தின் கொள்கைபோலும்!

## சிங்களவன் ஆளும் இனம் தமிழன் ஆளப்படும் இனம்! இதுவே தேவநாயகத்தின் கொள்கை! இதை ஏற்பானோ மானத் தமிழன்?

இதை மானமுள்ள எந்தத் தமிழனும் ஏற்கமாட்டான். சிங்களவர்களை எசமானர்களாக ஏற்றுக்கொண்டு அடங்கியொடுங்கி ஆமைகளாக, ஊமைகளாக தமிழர்கள் வாழமாட்டார்கள்; அவர்கள் தங்கள் தாயகத்தில் தமிழ்ஈழ மண்ணில் தமது அரசை நிலைநாட்டியே தீருவார்கள்! இதை எடுத்துக்காட்டுகின்ற பொதுத்தேர்தல்தான் யூலை 21 பொதுத்தேர்தல்!

சிங்களவர்கள் என்றென்றும் ஆளும் வர்க்கத்தினர்; — தமிழினம் என்றென்றும் ஆளப்படும் இனத்தினர்; சிங்கள இனத்தின் நல்லெண்ணத்திலும் தயவிலும், சிங்கள ஆட்சி இரக்கப்பட்டு தரும் அற்ப சலுகைகளிலுமே தமிழ் பேசும் மக்கள் தங்கியிருக்க வேண்டியவர்கள் என்பதே யூ.என்.பி.யின் கொள்கை. இந்தக் கொள்கையையே அச்சொட்டாக திரு. தேவநாயகமும் பின்பற்றி வருவதாற்போலும்— அவருக்கு மந்திரிப்பதவி வழங்கப்போவதாக திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறியிருக்கிறார்.

திரு. தேவநாயகம் யூ.என். பி. கட்சியின் கோட்பாடுகளை 17 ஆண்டுகளாக கடைப்பிடித்து வருவதாக திரு. ஜே. ஆர். கூறியிருக்கிறார்!

தமிழர்கள் ஆளப்பட வேண்டியவர்கள்; சிங்களவர்கள் ஆளவேண்டியவர்கள்; இதுதான் யூ. என். பி. யின் கோட்பாடு இக்கோட்பாட்டை விசுவாசமாகக் கடைப்பிடித்து வருபவர் திரு. தேவநாயகம்; அதனால் சிங்களக் கட்சித் தலைவர் ஜே. ஆர். திரு. தேவநாயகத்தைப் பாராட்டுகிறார். மந்திரி பதவி தருவேன் என்கிறார்!

ஐயோ தமிழா! கற்குடா தொகுதி வாழ் மானத் தமிழா! நீ ஆளப்படும் சாதியா? சொல்லுகிறார் தேவநாயகம். இதை ஏற்கிறாயா நீ?

இதை ஏற்காவிட்டால், ஆண்டபரம்பரை மீண்டும் ஒரு முறை ஆளவேண்டுமென்று போராடும் தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளர் சம்பந்த மூர்த்திக்கு வெற்றி சேர்! விடுதலைச் சங்கெடுத்து முழங்கு!

சிங்களக் கட்சிகளுக்கு சேவகம் செய்வோருக்கு செந்தமிழ் ஈழத்தில் இடமில்லையென்பதை எடுத்துக் காட்டு!


### கோப்பிகளில் கலப்படம்? ஓர் முக்கிய அறிவித்தல்

Brownson Industries

அரச, உணவு - மருந்துகள் சட்டத்திற்கு அமையவே

**"பிரவுண்சன் கோப்பி"**

தயாரிக்கப்படுகிறது.

ஆகவே,
கடைகளில் விற்பனை செய்யப்படும் சில கோப்பிகளில் பலவகை கலப்படப் பொருட்கள் (நிலக்கடலைக் கோது உட்பட) கலப்படம் செய்யப் படுவதாக சுகாதார ஆய்வினர்களின் அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஆனால்.,
**"பிரவுண்சன் கோப்பி"**
எவ்வித சேர்க்கையும் அற்ற நூற்றிற்கு நூறு வீதம் தூய்மையான கோப்பியென உறுதிப் படுத்துகின்றோம்.

பிரவுண்சன் இன்டஸ்ரீஸ்,
80 1/4, பிறைஸ் பிளேஸ்,
கொழும்பு-12. தொலைபேசி: 27197.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## உடுப்பிட்டி மக்களின் மகத்தான பொறுப்பு!

"எமது விடுதலை வெளிச்சக்திகளில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை; யாம் வெற்றிபெறுவதற்கு அருகதையுள்ளவர்களாக இருக்க வேண்டுமானால் — நமது சமூகத்திலிருக்கும் குறைகளைக் களைந்து அதைத் தூய்மை பெறச் செய்யவேண்டும். தமிழ் மக்களிடையே தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்று கூறப்படும் ஒரு சாரார் இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் மற்றவர்களால் ஒடுக்கப்படுவதாக கருதுகின்றனர். யாம் ஒருவருக்கு கொடுமை செய்தால், தர்ம நீதியின்படி எமக்கும் பிறரொருவர் அதைச் செய்வார். தமிழ் மக்கள் அரசியற் சுதந்திரம் பெறவேண்டுமானால் நம் சமுதாயத்திலே உரிமையற்றவர்களாய் இருக்கும் மக்களுக்கு அவ்வுரிமைகளை வழங்க வேண்டும்."

இன்று நேற்றல்ல — ஏறத்தாழ இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்னர்—18-12-1949ல் இலங்கைத் தமிழரசுக் கட்சியைஆரம்பித்துவைத்தபோது மூதறிஞர் தந்தை செல்வாவின் திருவாயிலிருந்து விழுந்த முத்துக்களே இவை.

தந்தை செல்வா அவர்கள் மொழிந்த இந்த உயர் நெறிக் கோட்பாட்டின் அடிப்படையில் நின்றுதான், கடந்த பல ஆண்டுகளாக தமிழ் சமுதாயத்துக்கு தீமை விளைத்துவரும் தீண்டாமைக் கொடுமையை அடியோடு வேரறுத்து — உயர்ந்தவன் தாழ்ந்தவன், அடக்கப்படுபவன், அடக்குபவன், தாழ்த்தப்படுபவன், தாழ்த்துபவன், என்ற பாகுபாடுகளை அடியோடு கெல்லியெறிந்து ஒரு சமதர்ம தமிழ் சமுதாயத்தை உருவாக்குவதற்கு தமிழரசுக்கட்சி விசுவாசத்துடனும், உண்மையுடனும் பாடுபட்டு வந்திருக்கிறது.

இதன் பயனாகத்தான்-தமிழ் மக்களிடையே காலாதிகாலமாக இருந்துவந்த சாதியுணர்ச்சி மெல்லமெல்ல மங்கத் தொடங்கியது; கோவில்கள், பொது நிலையங்கள், தேநீர்க்கடைகள், உணவு விடுதிகள் சகலருக்கும் சமத்துவம் தரத்தொடங்கின; சாதிவேறுபாடு காட்டியோர் தண்டனைக்குள்ளாக்கப்பட்டனர்; உள்ளூராட்சி மன்றங்களிலும், மூதவையிலும், சிறுபான்மைத் தமிழர்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைத்தது; கலப்புத் திருமணங்கள் நடைபெறத் தொடங்கின; சாதீய உணர்வு ஆட்டம் காணத்தொடங்கியது; சமத்துவ எண்ணம் மேலோங்கி வளரத் தொடங்கியது.

புதிய அரசியல் சட்டத்தில் சாதியும், தீண்டாமையும் பூண்டோடு ஒழிக்கப்படக்கூடிய விதத்தில் விசேட விதிகள் இடம்பெற வேண்டும் என்று தமிழர் கூட்டணிப் பிரதிநிதிகள் கொண்டுவந்த திருத்தங்களையெல்லாம், போலி முற்போக்கு பேசிய சிங்கள அரசாங்கமும், அதற்கு வால்பிடித்த தமிழ் பிரதிநிதிகளுமாக சேர்ந்து தோற்கடித்தனர்.

இப்போது ஈழத்தமிழினம், தமிழர் உரிமைகளை அங்கீகரிக்காத சிறிலங்காவின் புதிய அரசியற் சட்டத்தை முற்றாக நிராகரித்துவிட்டு, சுதந்திரத் தமிழ் ஈழம் ஒன்றை நிறுவி, அதில் சாதி மத பேதமற்ற சமதர்ம சமுதாயத்தை கட்டியெழுப்ப முடிவு செய்துவிட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி சுதந்திரத் தமிழ் ஈழம் ஒன்றை அமைப்பதற்கு யூலை 21ம் நாள் தமிழ் பேசும் மக்களிடமிருந்து கட்டளையை எதிர்பார்த்து நிற்கிறது.

இந்த நிலையில், ஈழத் தமிழினம் சுதந்திரம் பெறுவதற்கு தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டு விட்டது— அதற்குரிய தார்மீக பலத்தை பெற்றுவிட்டது; தனக்குள் ஆண்டான் அடிமை, உயர்ந்தவன் தாழ்ந்தவன் எனும் நிலையைப்போக்கிக்கொண்டுவிட்டது; என்பதைநிதர்சனமாக எடுத்துக்காட்டவேண்டிய காத்திரமான பாரிய பொறுப்பினை தமிழர் விடுதலைக்கூட்டணி உடுப்பிட்டி தொகுதி மக்களிடம் மிகுந்த நம்பிக்கையோடு ஒப்படைத்திருக்கிறது.

**உருவாகும் தமிழ் ஈழத்தில் பிறப்புக்காரணமாக — சாதி காரணமாக — எந்த ஒரு தமிழனும் உரிமையிழக்கும் நிலை தோன்றவே தோன்றாது; எல்லார்க்கும் எல்லா உரிமையும் உள்ளதாக தமிழ் ஈழம் அமையுமென்ற நம்பிக்கையையும், உறுதியையும் தமது செயல் மூலம் காட்டிட வேண்டிய மகோன்னதமான கடமை உடுப்பிட்டிதொகுதி மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.**

ஆம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் உடுப்பிட்டித் தொகுதியில் போட்டியிடும் திரு. இராசலிங்கம் அவர்களுக்கு உடுப்பிட்டித்தொகுதி மக்கள் ஈட்டிக் கொடுக்கப்போகின்ற மகத்தான வெற்றியிலேயே 35 இலட்சம் ஈழத் தமிழர்களின் சுதந்திரம், கௌரவம், தார்மீகபலம், ஒற்றுமை, வருங்காலம் ஆகியவை தங்கியிருக்கிறது.

**ஈழத்தமிழினம் தனது அரசியல் சுதந்திரத்தை பெறுவதற்கு தகுதிபெற்றுவிட்டது என்பது உண்மையானால் — அதை இராசலிங்கத்தின் வெற்றியின் மூலம் உலகுக்கு உணர்த்த வேண்டிய பொறுப்பு உடுப்பிட்டி தொகுதி மக்களினுடையதாகும். ஆகவே ஈழத்தமிழினத்தின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கின்ற மிகப்பெரிய கடமை உடுப்பிட்டித்தொகுதி வாக்காளப் பெருமக்களின் கரங்களிலேயே தங்கியுள்ளது.**

உடுப்பிட்டித்தொகுதியில் — இராசலிங்கம் ஏதாவது ஒரு காரணத்தினால் வெற்றிவாய்ப்பை இழக்கும் சூழ்நிலை ஏற்படுமாயின், அது 35இலட்சம் தமிழினத்தையும் பாதிக்கும்; தமிழ் ஈழத்தின் விடுதலைப்போராட்டமும் பின் தள்ளப்பட்டுவிடும்; விடுதலைகேட்பதற்கு ஈழத்தமிழனுக்கு என்ன தகுதியுண்டென்று சிங்கள மக்களும் உலகநாட்டினரும் நம்மை நோக்கி கேவலமாக இழித்தும், பழித்தும் உரைப்பார்கள்; நாமும் விடுதலை கோருவதற்குரிய நமது தார்மீக பலத்தை இழந்தவர்களாகி விடுவோம்!

எனவே தமிழ் ஈழத்தின் விடுதலைப் போராட்டத்தை பின் தள்ளிவிடக் கூடியதும், தமிழ் சமுதாயத்துக்கு தலைகுனிவு ஏற்படக் கூடியதும், இனத்துக்கு இழிவும் பழியும் தரக்கூடியதுமான சூழ்நிலையை தவிர்த்து — கண்ணீரும் செந்நீரும் சிந்தி வளர்த்த தமிழ்ஈழ விடுதலைப் பயிரைப் பாதுகாக்கின்ற மகத்தான பொறுப்பு தங்களிடமே சுமத்தப்பட்டுள்ளதென்பதை உணர்ந்து, உடுப்பிட்டித்தொகுதி வாழ் தமிழ்மக்கள் சொந்தக் குரோதங்களுக்கும், சாதி பேத உணர்வுகளுக்கும், ஊர்ப்பிரிவினைகளுக்கும் கிஞ்சிற்றும் இடந்தராமல் கூட்டணியொன்றே நம் இயக்கம்; உதயசூரியன் ஒன்றே நம் சின்னம்; சமதர்மத் தமிழ் ஈழம் ஒன்றே நம் குறிக்கோள்; என்ற உணர்வுடன் இராசலிங்கம் அவர்களுக்கு மாற்றார் திகைக்கும்படியான மாபெரும் வெற்றியை ஈட்டிக்கொடுப்பார்கள் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம்.

# பிரதேச, சாதிமத பாகுபாடற்ற ஒரே இயக்கம் கூட்டணியே!

## 'தினபதி'யின் பொய்ச்செய்திக்கு உதுமான் ஆப்பு!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர் நியமனக்குழு உறுப்பினர் டாக்டர் ஆ. உதுமா லெப்பை பின்வரும் அறிக்கையொன்றை சுதந்திரனுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இம்மாதம் •2ம் திகதி தினபதியில் த. வி. கூட்டணியில் வடக்கு-கிழக்கு துவேஷம் என்னும் தலைப்பில் வெளிவந்த செய்தியைக் கண்டதும் நான் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தேன்.என்றுமே நான் நினைத்துக்கூடப் பார்த்திராத செய்தியை பச்சைப்புழுகை தினபதி வெளியிட்டிருபபது மிகுந்த வேதனைக்குரியதாகும்.

"மூதூரில் உண்மையில் நடந்தது இதுதான் ஜனாப் மக்கீன் அவர்களின் இல்லத்தில் சில தமிழ் வாலிபர்கள் என்னைச் சந்தித்து திருமலை வேட்பாளர் நியமனம் பற்றிக் கதைத்தார்கள். திரு. தங்கத்துரைக்கு ஏன் நியமனம் கொடுக்கவில்லை என்பது பற்றியும் கேட்டார்கள் அப்போது முஸ்லிம் ஐக்கிய முன்னணியின் தலைவர் ஜனாப் பஸீல் ஏ. மஜீத் அவர்களும் என்னுடன் இருந்தார்.

"திருமலை நியமனத்தைப் பொறுத்தவரை நியமனக் குழுவில் பலர் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்த போதும் பல காரணங்களை முன்னிட்டு தற்போதைய முடிவுக்கு வரவேண்டியிருந்தது ஆயினும் இறுதியாக எடுத்த முடிவு ஏகமனதானதே என்று பதில் கூறினேன்.

"அப்போது இந்த முடிவு வடக்கு—கிழக்கு துவேஷத்தில் செய்யப்பட்டது என்றும் ஒரு தனிமனிதனின் விருப்பத்திற்காகச் செய்யப்பட்டது என்றும் கூறினார்கள். அதை மறுத்த நான் அப்படியாயின் இப்போது திருமலையில் நியமிக்கப்பட்டிருப்பவர் வடக்கைச் சேர்ந்தவரல்ல கிழக்கைச் சேர்ந்தவர் என்பதை நீங்கள் மறுக்க முடியாது எனவும் நான் கூறினேன். இந்த நிலையில் திரு. தங்கத்துரையைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள் எனக்கேட்டார்கள். மிக நல்லவர் என்றும் நியமனம் கிடைக்காதபோதும் திரு. சம்மந்தருடன் இணைந்து கூட்டணிப் பிரசாரத்தில் அவர் ஈடுபட்டிருப்பது அவரது இலட்சியப்பற்றையும் பெருந்தன்மையையும் காட்டுகிறது என்றும் சொன்னேன்.

"உண்மை இதுதான். தினபதி குறிப்பிட்டிருந்தபடி கருத்தரங்கெதுவும் அங்கு நடைபெறவில்லை. கூட்டணியில் மிகுந்த செல்வாக்குப் படைத்த ஒரு தலைவர் சீறிவிழுந்தார் என்றோ துவேஷத்தைக் கக்கினார் என்றோ ஒருபோதும் நான் கூறிவில்லை. நியமனக் குழுவிலிருந்த கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்த நாங்கள் இருவரும் (நான், திரு. றேச்டி வாஸ்) புறக்கணிக்கப்பட்டோமென்றும், வடக்கு கிழக்கு துவேஷம் காட்டப்பட்டது என்றும் தினபதியில் குறிப்பிடப்பட்டிருப்பது அப்பட்டமான பொய்யாகும்.

"இன்று இலங்கையிலேயே சாதி, சமய, பிரதேச வேறுபாடுகளுக்கு அட்பாற்பட்ட ஒரு இயக்கம் உண்டென்றால் அது த. வி. கூட்டணிதான் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்ளவிரும்புகின்றேன்.

"கூட்டணியின் நியமனக் குழு நான்கு முஸ்லீம்களையும், இரு கத்தோலிக்கரையும், ஒறு சிறுபான்மைத்தமிழரையும் ஏனைய இந்துவேட்பாளரையும் நியமித்திருப்பதிலிருந்தே சாதி சமய பிரதேச வேறுபாடுகட்கு அப்பாற்பட்டது எங்கள் இயக்கம் என்பதை எவரும் இலகுவில் புரிந்துகொள்ளமுடியும்.

முழுக்க முழுக்க உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டு — பாகுபாடும் பாரபட்சமுமற்ற எங்கள் தலைவர்கள் மீதும் என்மீதும் தினபதி சுமத்திய அபாண்டமான பழியை அறிவு படைத்த தமிழ் பேசும் மக்கள் ஒருபோதும் நம்பமாட்டார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூடு கூட்டணி ஆதரவாளர் பலி!

மட்டக்களப்பில் கூட்டணி ஆதரவாளர்களுக்குஎதிரானவன்முறைச் செயல்கள்கட்டுமீறியுள்ளன. வீச்சுக் கல்முனை என்னுமிடத்தில் 6-7-77ல் நடைபெற்ற ஒரு துப்பாக்கிச் சூட்டில் 10 பிள்ளைகளின் தாயார் திருமதி பேதுரு அன்னம்மா (வயது 40) உயிரிழந்தார். மற்றும் ஒருபெண்உட்பட,மூவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

## இளைஞர் பேரவை மாநாடு

9-7-77 சனிக்கிழமை துன்னாலை வடக்கு ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு அண்மையில் உடுப்பிட்டித் தொகுதி த. இ. பேரவை மாநாடு நடைபெறும்.

காலை 9 மணிக்கு அமைப்பாளர் ச. செந்துராசா தலைமையில் இளைஞர் மாநாடும் நண்பகல் 1 மணிக்கு மகளிர் பேரவை தலைவி திருமதி தாமோதிரம்பிள்ளை தங்கம்மா தலைமையில் மகளிர் மாநாடும்,மாலை 5 மணியளவில் உடுப்பிட்டி த. வி. கூ. வேட்பாளர் திரு. த. இராசலிங்கம் அவர்கள் தலைமையில் இளைஞர் எழுச்சிக் கூட்டமும் நடைபெறும்.இக்கூட்டத்தில் ஈழவேந்தன், கரிகாலன், இ. பேரின்பநாயகம் இரகுபதி பால ஸ்ரீ தரன், சூசைதாசன் (மன்னார் வேட்பாளர்) தா. திருநாவுக்கரசு மற்றும் பலரும் உரையாற்றுவார்கள். தமிழிளைஞர் பேரவை மாநாட்டில் கொடிஏற்று வைபவம் திரு. இ. ஞானமூர்த்தி அவர்களால் நடாத்தப்படும். முன்னை நாள் உடுப்பிட்டி பா.உ. திரு. க. ஜெயக்கொடி அவர்கள் மங்கல விளக்கேற்றி வைப்பார், தமிழ்ஈழ தேசியகீதத்துடன் மாநாடு ஆரம்பமாகும்.

இம் மாநாட்டில் விசேட பேச்சாளராக செயலதிபர் அ. அமிர்தலிங்கம் அவர்களும், மகளிர் மாநாட்டில் விசேட பேச்சாளராக செயலதிபர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்களும் கலந்துகொள்வார்கள். சகல தொகுதி இளைஞர் பேரவை மகளிர் பேரவை உறுப்பினர்களையும் இம் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு உடுப்பிட்டி த. இ. பேரவையினர் வேண்டுகின்றனர்.


## 'அரசியல் மடல்' நூலாகிறது!

சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் அவர்கள் எழுதி வந்த 'அரசியல் மடல்'களின் முதலாவது தொகுதி அடுத்த வாரம் விற்பனைக்கு வருகிறது. தேவையானோர், கோவை மகேசன், 194 ஏ, பண்டாரநாயக வீதி, கொழும்பு-12 எனும் மகவரிக்கு தொடர்புகொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தளத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றி முழக்கம்!

## டாக்டர்இல்யாசை ஆதரித்துசிந்தனைசிற்பி கொள்கை விளக்கம்!



புத்தளம் தொகுதியில் கடந்த வாரத்தில் நான்கு நாட்களாக இருபத்தைந்துக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவை கொழும்புக்கிளை உறுப்பினர்களும் தமிழ்த்தொழிற் சங்கக் கூட்டணி உறுப்பினர்களும் அரசாங்க எழுதுவினைஞர் சங்க உறுப்பினர்களும் பல கிராமங்கள் தோறும் கால்நடையாகவே சென்று ஒரு வீடு தவறுது வீட்டுக்கு வீடு பிரசாரங்கள் நடாத்தி மாற்றுக் கட்சியினரின் பொய்ப் பிரசார மூட்டைகளுக்கும் பதிலளித்து டாக்டர் இல்யாசின் வெற்றியை உறுதிப்படுத்திக்கொண்டனர்.

இத்தொகுதியில் தேற்ருப்பழை,நரக்களி. புத்தளம் நகரம் ஆகிய இடங்களிலும் 2ம் திகதியும், 3ம் திகதியும் மாபெரும் பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன. இப்பொதுக்கூட்டங்களில்கோப்பாய் முன்னுள் தே. பே. உ. சிந்தனைச் சிற்பி சி. கதிரவேற்பிள்ளை, கொழும்பு தமிழ் இளைஞர் பேரவைத் தலைமைப்பீடத்தைச் சேர்ந்த திரு. ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன், திரு. க. சண்முகநாதன் B. A. ஊர்காவற்றுறைதமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் சட்டத்தரணி சு. க. மகேந்திரன், கொழும்பு தமிழ் மகளிர் பேரவைத் தலைவி செல்வி. திலகவதி கணபதிப்பிள்ளை ஜனுப் அப்துல்லா, புரட்சிமாறன் ஆகியோருடன் இம்மாதம் 21ம் திகதி புத்தளத்தில் வெற்றிவாகை சூட இருக்கும் டாக்டர் இல்யாசும் உரையாற்றினர்.

புத்தளம் நகரில் 2ம் திகதி இரவு நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் சிந்தனைச் சிற்பி திரு. மு. கதிரவேற்பிள்ளை உரையாற்றிய போது, "புத்தளம் தொகுதி மக்கள் முன் தமிழர் விடுதலைக்கூட்டணி நான்கு புதிய விடயங்களை வைத்துள்ளது. புத்தளம் தொகுதி தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் இந்நான்கு புதிய விடயங்களையும் நன்கு ஆராய்ந்து வாக்களிக்க வேண்டிய நிலையில் உள்ளார்கள். முதலாவது புதிய கட்சி முஸ்லிம் பெருமக்களின் நன்மையைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கென தோற்றுவிக்கப்பட்ட முஸ்லிம் ஐக்கிய முன்னணி தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஒரு அங்கமாக இணைந்து புத்தளம் தொகுதியில் இம்முறை போட்டியிடுகிறது—

இரண்டாவதாக புதிய கொள்கை — இந்நாட்டில் ஒரு இனம் மற்ற இனத்தை அடிமைப்படுத்தி ஆள முடியாதென்பதையும், தமிழ் பேசும் இனம் சுயநிர்ணய உரிமையும் சுதந்திரமுமுடையது என்பதையும் புதிய கொள்கையாகக் கொண்டது முஸ்லிம் ஐக்கிய முன்னணி—

மூன்ருவது புதிய வேட்பாளர்—உங்கள் புதிய வேட்பாளரான டாக்டர் இல்யாசைப்பற்றி நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை —அவர் உங்களில் ஒருவர்— ஏழைப்பங்காளர் — அவரது வீடு எந்நேரமும் திறந்தபடிதான் இருக்கும் — அவரும், அவரது மனைவியும் உடல் நோய்களுக்கு தற்சமயம் சிகிச்சை செய்வதுபோல் எதிர்காலத்தில் முஸ்லிம் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள நோய்களுக்கும் சிகிச்சை செய்யக்கூடியவர்கள்.

அடுத்து புதிய சின்னம்— முஸ்லிம் மக்களின் துயரைப் போக்கவந்த புதிய சின்னம் தான் உதயசூரியன். வெற்றி டாக்டருக்கே என்று காட்டுவது போல் உதயசூரியன் அமைந்துள்ளான் என்று கூறிமுடித்தார்.

கொழும்பு த. இ. பேரவைப் பிரமுகர் திரு. க. சண்முகநாதன் உரையாற்றும் போது, "தவித்துக் கொண்டிருக்கும் புத்தளம் வாழ் தமிழ்பேசும் மக்களுக்கு புதிய உத்வேகத்தைத் தந்துள்ளன முஸ்லிம் ஐக்கிய முன்னணியும், உதயசூரியனும், டாக்டர் இல்யாசும்" என்று குறிப்பிட்டார்.

ஊர்காவற்றுறை இளைஞர் பேரவைத் தலைவர் திரு. சு. க. மகேந்திரன் உரையாற்றும் பொழுது, "மாறி மாறிவரும் சிங்களக் கட்சிகளால் ஏமாற்றப்பட்ட தமிழ்பேசும் மக்கள் மத்தியில் த. வி. கூட்டணி ஒரு புதிய சிந்தனையை ஏற்படுத்தியுள்ளது" என்ருர்—

கொழும்பு தமிழ் இளைஞர் பேரவைப் பிரமுகர் திரு.ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் "தெரு நாயிலும் கீழாக சுடுபட்டுச் சாவதிலே மட்டும் இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் வாழும் தமிழன் ஒன்றுபட்டிருக்கிருன்" என்று கூறி, யாழ்ப்பாணம் தமிழாராய்ச்சி மாநாட்டு, கொலை சீனக்கொலை துப்பாக்கி சூடு, புத்தளம் படுகொலை, செம்மணி பரராசா கொலை, சிவனு இலட்சுமணன் கொலை, திருமலைச் சம்பவங்கள் ஆகியவற்றை எடுத்து விளக்கி இன்று தமிழ்பேசும் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு உதய சூரியன் கொடியின் கீழ் போராட முனைந்து விட்டார்கள். வடக்கு, கிழக்கிலிருந்தெல்லாம் த. வி. கூட்டணியினர் அமோக வெற்றி பெறும்போது புத்தளத்திலிருந்தும் இஸ்லாமியத் தமிழ் மகனின் உணர்ச்சிக் குரல் கேட்கவேண்டுமென நாம் விரும்புகிருேம்" என்ருர். அவர் தொடர்ந்து பேசுகையில், மாற்றுக் கட்சியினர் நடாத்தி வரும் பொய்ப் பிரசாரத்திற்கு ஆப்பு வைக்குமாறு டாக்டர் இல்யாஸ் மிக அதிகப்படியான வாக்குகளால் தெரிவுசெய்யப்பட வேண்டிய அத்தியாவசியத்தை விளக்கினர்.

முஸ்லிம் ஐக்கிய முன்னணி புத்தளம் தொகுதித் தலைவர் ஜனுப் அப்துல்லா,தமிழ் ம. பேரவை கொழும்புக் கிளைத் தலைவி செல்வி திலகவதி கணபதிப்பிள்ளை, சுடர் கலை இலக்கிய மன்றத்தைச் சேர்ந்த புரட்சிமாறன்,டாக்டர் இல்யாஸ் ஆகியோரும் உரையாற்றிய பின் செல்வி தி. கணபதிப்பிள்ளையின் தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

---


### விற்பனையாகிறது!

குரும்பசிட்டி

இரா. கனகரத்தினத்தின்

**செல்வாவின் சிந்தனைகள்**

தபாலில் ரூபா. 1/20

எழுதுக:

128/8, Chetty Garden,
Mulgambola,
KANDY.


---

### தேவை

தந்தை செல்வாவிடம்ஆசி பெற்றுள்ளவரும் புதிதாக தமிழ்நாடு அரசி(ய)ல் நுழைவுபெறப்போகும் முன்னுள் கொழும்பு இந்துக்கல்லூரியைச் சேர்ந்தவரும் இ.போ.ச.வில் பணியாற்றிய 37 வயது கொண்டவரும், தற்போது ஸ்ரீமா/சாஸ்திரி உடன்படிக்கைப்படி தமிழ் நாடு செல்லும் இந்து இளைஞர் தகுந்த மணப்பெண்ணை விரும்புகிருர்.

பெண், சுயமாக உத்தியோகம் செய்யக்கூடிய, ஆடம்பரமற்றவராயும் அரசியல், கலை, சமய, சமூக சேவை போன்ற விடயங்களில் சிறந்தும, தமிழ்நாடு வரக்கூடியவராயும்இருத்தல் வேண்டும்.

வசதியுள்ளவர்கள் முழு விபரங்களுடனும் புகைப் படத்துடனும் 31.8.77க்கு முன்பதாக மனுச்செய்க கிறிஸ்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

—மே/பா சுதந்திரன்.

---

## உடுப்பிட்டிதொகுதி கூட்டணி பிரசாரக் கூட்டங்கள்!

6-9-7-77 — தமிழ் இளைஞர்பேரவை எழுச்சிமாநாடு —துன்னலை,

10-7-77 — குஞ்சர் கடை, கரணவாய்.

11-7-77 — பொலிகண்டி கந்தசாமி கோவிலடி.

12-7-77—நவிண்டில்,நாவலர் மடம்.

13-7-77 சாண்டார் சந்தை

14-7-77 — தொண்டமானுறு, நெல்லியடி (அ. எ. வி. சங்கத்தின் ஆதரவில்)

15-7-77 —உடுப்பிட்டி.

16-7-77 — வல்வெட்டித் துறை.

17-7-77—நுணுவில் பிள்ளையார் கோவிலடி.

18-7-77 யாழ் முற்றவெளி கூட்டம்.

19-7-77—வதிரி முருகையன் கோவிலடி.

---

## அமரர் 'திரு'வின் 'ஈழத்தமிழரின் இறைமை' நூல் வெளியீடு!

உலகப் பிரசித்திபெற்ற அமிர்தலிங்கம் ட்ரயல்-அற்-பார் வழக்கில் அமரர் மு. திருச்செல்வம் கியூ.சி. அவர்கள் நீதிமன்றத்தில் ஈழத் தமிழர்களின் இறைமை, அரசுரிமை பற்றி நிகழ்த்திய வரலாற்றுப் புகழ்பெற்றஉரை இப்போது நூல்வடிவில் வெளிவந்து விட்டது. இந்த நூல் வெளியீட்டுவிழா 10-7-77 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு வெள்ளவத்தை ராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறுகிறது. இவ்விழாவில் பேராசிரியர் சு. வித்தியானந்தன், இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை விரிவுரையாளர் கலாநிதி எஸ். பத்மநாதன், சட்டத்தரணி திருமதி சாந்தினி ஞானகரன் ஆகியோர் உரையாற்றுகிருர்கள். கூட்டணித் தலைவர்கள் சிலரும் இதில் கலந்துகொள்வார்கள் என்று தெரிகிறது. நூலொன்றின் விலை ரூபா 4/25.

---


## எமது வெளியீடுகள்

| | |
|---|---|
| நெஞ்சம் நிறைந்த தம்பி —கோவை மகேசன் | 2-00 |
| தெருப்புலவர் சுவர்கவிதை —கவிஞர் காசி ஆனந்தன் | 1-00 |
| தமிழ் மண் காப்போம் தாயகம் மீட்போம் (மூன்ரும் பதிப்பு) —ஈழவேந்தன் | 1-00 |
| இலங்கையில் தமிழர் உயர்கல்வி —பேராசிரியர் ஹிலறி குறாஸ் | 2-00 |
| இலங்கைத் தமிழர் இன்னல் தீருமா —டாக்டர் இரா. சனர்த்தனம் —ஆ. இராசரத்தினம் (எல்லாளன்) | 1-00 |
| அனைத்துலக நீதிச்சபை முன் இலங்கை தமிழர் பிரச்சினை —தமிழர் கூட்டணி அறிக்கை | 2-00 |
| தடுப்புக்காவலில் பத்து நாட்கள் —கா. பொ. இரத்தினம் பா. உ. | 1-00 |
| தமிழன் சிந்திய இரத்தம் 1958ல் நடந்தஇனக்கலவரம்பற்றியது —நாவண்ணன் | 1-50 |
| துரோகிகளே தூரவிலகுங்கள் —கோவை மகேசன் | 2-50 |
| ஏன் வேண்டும் தமிழ் ஈழம்? | 2-00 |
| புத்தளத்தில் இரத்த களம் —நாவண்ணன் | 3.00 |

V. P. P. ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
தபால் செலவு சதம். 60

சுதந்திரன் வெளியீட்டகம்,
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரமொடிந்த நொண்டி வாளெடுப்பதா?

# தீவுப்பகுதியில் வீரம்பேசுகிருர் சோரம்போனவர்!

## மூளையைக் குழப்பி முக்காடு போடுகிருர் ஊளையிடுகிருர் ஒப்பாரி வைக்கிருர்!

**தமிழர் கூட்டணி தமிழ்ப் பேசும் மக்களின் விடுதலைக்காகத் துவக்கப்பட்ட மாபெரும் இலட்சியத்தைக் கொண்ட ஒரு விடுதலை இயக்கமாகும்.**

இதை அழிக்கும் வல்லமை எவருக்குமே இல்லை. ஏனெனில் இது மக்களின், இளைஞர்களின் இயக்கம். இந்த நிலை ஏற்பட்ட பின்பு எமது ஐக்கியத்தை உடைத்து ஒற்றுமையைக் குலைக்க என கங்கணம்கட்டி வெளிப்பட்டிருக்கிருர் சுயாட்சி'நவம்'.

தந்தை செல்வாவின் தலைமையை ஏற்காது கட்சியின் புனித இலட்சியத்துக்குக் கட்டுப்படாது, மற்றவர்களின் ஏகோபித்த கருத்துக்கு இடமளியாது, தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்' என தான்தோன்றித்தனமாக திரிந்த மனிதர் 'நவத்தை' தீவுப்பகுதிப் பெருங்குடி மக்கள் கடந்த தேர்தலில் வேண்டாம் ஐயா நீர், விலகி நில்லும் என்று முற்றுக்கூறி விட்டார்கள்.

இதன்பின் அரசியல் விதவையாக, அஞ்ஞாதவாசம் செய்துகொண்டிருந்த நவத்தார் திரும்பவும் இன்று மக்களிடம் வாக்குப்பிச்சை கேட்டுத் திரிகிருர்.

கவிஞர் காசிஆனந்தன் சிறையிலிருந்து யாழ்நகர் வந்ததும், முதல் முதலாக நவத்தை சந்தித்து தமிழர் கூட்டணியில் ஒன்ருகக் கலந்துவிடுமாறு வேண்டுகோள் விடுத்தார். அண்ணு அமிர் அவர்களும், உடுப்பிட்டி சிவாவும் இன்னும் பல இளைஞர்களும் இவரை கூட்டணியில் சேருமாறு அழைப்பு விடுத்தார்கள். இவையெல்லாம் பலனற்றதாகிவிட்டது.

அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந்த 'நவம்' கட்டுப்பாடில்லாதவர். தமிழர் முன்னணி மக்கள் சக்தியைப் பெற்று பெருமளவு வளர்ந்திருப்பது கண்டு பொருமையும், பொச்சரிப்பும் படுபவர். மகிழ்ச்சியோடு மாங்கல்யம் அணிந்த பெண்ணைப் பார்த்தவுடன் விதவையின் வயிறு எரிகிறது' இதே நிலைதான் அரசியல் விதவையான நவத்திற்கும் ஏற்பட்டது. இதன் விளைவுதான் சுயாட்சிக்கழகம்.

மேனியின் மெருகை இழந்து, அழகை இழந்து, எல்லாவற்றையும் விட பருவத்தையே இழந்துவிட்ட இந்த அரசியல் விதவைக்கு இனி மாலை சூட்டுபவன் யார்? புரியாமல் பிதற்றித் திரியும் விதவையைக் கண்டு தீவுமக்கள் உண்மையிலேயே பரிதாபப்படுகிருர்கள்.

### கா. பொ. இரத்தினம் இலட்சிய வீரர்

செந்தமிழில் பேரவையில் கர்ச்சிக்கும் சிங்கம் கா.பொ. தமிழர் கூட்டணியின் நடவடிக்கைகள் எல்லாவற்றிற்கும் முன்னின்று உழைப்பவர். இன்று 'பஸ்' பலகை தொடக்கம், அரசாங்க இலாகாக்களில் உள்ள அத்தனை பெயர்ப்பலகைகளிலும் தமிழ் பொறித்திட வகை செய்தவர் பண்டிதர்தான். தீவுப்பகுதி மக்களின் அத்தியாவசிய தேவைகளான குடிநீர், போக்குவரத்து வசதிகள் என்பவற்றை ஓரளவு திறம்பட செய்து முடித்திருப்பவர் பண்டிதரே.

திருநெல்வேலியில் 5000 சிங்களக் குடும்பங்களை இரவிரவாக குடியமர்த்த அரசியலார் செய்த ஆட்சியை அம்பலப்படுத்தி, அத்தொகுதி எம். பி. திரு. அருளம்பலத்துக்கு தகக புத்திமதி கூறி இந்த சதியை முறியடித்த பெருமை கா. பொ. இரத்தினத்துக்கே உரியது. தீவுப்பகுதி மக்கள் இதனையிட்டு பெருமைப்படுகிருர்கள்.

ஏழை மக்கள் தொண்டளுக, தீவுப்பகுதி மக்களின் உண்மைப் பிரதிநிதியாக, தமிழ் மக்களின் சுதந்திர தாகத்தின் இருப்பிடமாக உள்ள பண்டிதர் அவர்கள் இம்முறை 20,000 வாக்குகளின் பெரும்பான்மையால் வெற்றி பெறுவார் என்பது திண்ணம்.

செ. ஈழக்குமார்
நெடுந்தீவு

# சுயஇச்சை குமாருக்கு தெருக்கூத்தன் கடிதம்

அன்பின் குமார்,

மண் உருண்டை கொண்டு எறிந்து விளையாடும் சிறு பிள்ளை, 'தான்தான் பெருவீரன்' என நினைந்து எக்களிக்கும். அதுபோன்று யாழ் நகரின் தெருவோரங்களில உங்கள் கற்பனையின் திறமைகளை கைவண்ண ஓவியங்களாக்கிவிட்டு தேர்தல் விழாக் கதாநாயகஞக ஊர்வலம் வருகின்றீர்கள். குற்றம் புரிந்தவனே குற்றவாளியைக் கண்டுபிடிக்க, தான் நல்லவனே என நம்பவைக்க பொலிசுக்குப் பல உதவிகளைச் செய்வதுண்டு. நீங்களும் தேர்தலில் பல மாயாஜால வித்தைகளைக் காட்டுவதாக இங்கு சிலர் பறைசாற்றுகின்ருர்கள்; ஆனுல் நான் அவைகளை நம்பவில்லை; அதனுல் இம்மடலை எழுதுகின்றேன்.

உங்கள் அப்பா தமிழரின் ஒற்றுமைக்காகப் பாடுபட்டவர்; தமிழர் கூட்டணியின் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர்; வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை ஏற்றவர். அவரின் மைந்தன் நீங்களோ, தந்தை கண்ட இராச்சியத்தை தவிடுபொடியாக்கி வருகின்றீர்கள்; அவர் வளர்த்த கூட்டணியை ஒருகை பார்க்கின்றீர்கள்; அவர் கொண்ட கொள்கைக்கு சமாதிகட்ட நினைக்கின்றீர்கள், இக் குற்றச்சாட்டுக்களை மறுக்க நினைக்கின்றீர்கள்? 1970ம் ஆண்டு தேர்தலில் குதிக்கக் கங்கணம்கட்டி நின்றீர்கள்; உங்கள் தந்தை அழுங்குப்பிடியாகவே மறுத்துவிட்ட காரணம் உங்களின் நிலையற்ற கொள்கையின் காரணமாகவா?

உங்களுக்கு ஒரு செய்தி தெரியுமா? நீங்களும் இளைஞர்; சந்திரகாசனும் இளைஞர்; இருவரும் மறைந்த இரு பெருந்தலைவர்களின் புதல்வர்கள்; சந்திரகாசன் சென்ற பல தேர்தல்களில்— இம்முறை உடுப்பிட்டித் தொகுதியில் — முன்னின்று உழைத்தார்; உழைக்கின்ருர். நீங்கள் அப்படியான தகுதிகளை உங்களுடையதாக ஆக்கிக்கொள்ளவில்லை. என்ருலும் தந்தையின் வாரிசுக்கே பதவி தருவார்கள் என்று நிற்கின்றீர்கள். ஆனுல், சந்திரகாசனே "பண்ணையாரின் மைந்தனுக்கே பண்ணை சொந்தமாவது போல் தேர்தல் தொகுதியையும் ஆக்கப்படாது, அரசியல் ஒரு பண்ணையாகாது' என்று கூறுகின்ருர். விபூஷணனையும் மக்கள் எண்ணுகின்றனர்; அந்தப் பரதனையும் எண்ணுகின்றனர்.

நீங்கள் ஒரு மேக வண்ணன்தான். அந்த மேக வண்ணன் இராமனையும் அவனது படையையும் தன் மாயஜாலவித்தைகளினுல் கதிகலங்கச் செய்தான். நீங்களும், "இதோ பார் இவர்கள் சுவர்களில் எழுதுகின்றனர்; காடைத்தனம் புரிகின்றனர்" என்று நாளுக்கு நாள் கூறி அவற்றுக்குப் புதிய அர்த்தங்களையும் கூறிப் பவனி வருகின்றீர்கள். இராமன் சீதைக்காகப் [illegible] சிருஷ்டித்து சிரத்தை வெட்டினுன். கிட்ட நெருங்குது தேர்தல்; நீங்களும் வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு என்ன செய்யப்போகின்றீர்கள்.

சட்ட அறிஞன் நீங்கள்; இருபதாம் நூற்ருண்டின் கொடை வள்ளல் மக்கள் திலகத்தை கதிகலங்கச்செய்வேன் என்று கூறி தமிழ்நாடு சென்றீர்கள். யாழ் நகரின் இளைஞர் திலகம் யோகேஸ்வரனையும் ஒருகை பார்க்கின்றேன் என்று கங்கணம் கட்டி நிற்கின்றீர்கள். முன்னையது புஸ்வாணம் ஆகிவிட்டது; பின்னையதும் அதே கதிதானே.

கூட்டணியின் கொள்கையே என் கொள்கை என்றீர்கள்; இப்பொழுது அக்கொள்கையிலிருந்து தூர விலகி ஓடுகின்றீர்கள். கூட்டணியின் கொள்கையை ஆதரிப்பவன் நான் என்றீர்கள்; கூட்டணியின் வேட்பாளரையே எதிர்த்து நிற்கின்றீர்கள். கூட்டணியில் வேட்பாளர் மனுக்கேட்டு நின்றீர்கள்; இப்பொழுது கூட்டணியை சாடி நிற்கின்றீர்கள்; துரையப்பா வழக்கிலே வாதிடுவேன் என்றீர்கள் இப்பொழுது அவர்களின் உதவி நாடி நிற்கின்றீர்கள். என்ன விசித்திரம் உங்கள் நிலை உங்களுக்குகே புரிகின்றதா? உங்கள் கதி தமிழருக்கும் வரவேண்டுமா?

ஐந்தாம் வகுப்பு மாணவன் கேட்கும் கேள்விகளை நீங்களும் கேட்கின்றீர்கள். "உங்கள் தலைவன் யார்? அவனேன் கூட்டணியில் நிற்கவில்லை?" என்றுறெல்லாம் கேட்கின்றீர்கள். தேர்தலுக்காக வந்த உங்களுக்கு பல வருடங்களாக நடைபெற்றுவரும் அரசியல் வரலாற்றை, சூழ்நிலைகளை, தாற்பரியத்தை, பல கட்சிகளின் கொள்கைகளை கோட்பாடுகளை, அக்கட்சிகள் வளர்ந்த வளர்க்கப்படுகின்ற சூழ்நிலைகளை நீங்கள் அறியமாட்டீர்கள்தான். அதற்காக, 'வடக்கு வழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த மற்றைய மாகாணங்களில் வாழும் தமிழர்கள் ஈழக்கொள்கையை ஏற்கின்றனரா என்று அறிய வாக்கெடுப்பு ஏன் நடத்தவில்லை'—என்ற கேள்வியைக் கேட்கலாமா? பாகிஸ்தானுக்காகப் பாடுபட்ட ஜின்னு இந்திய முஸ்லிம்களின சம்மதத்தைப் பெற்ரு தனி நாட்டைக் கேட்டார்? லண்டனிலும் நம்மவர்கள் இருக்கின்ருர்கள்; அங்கும் ஒரு வாக்கெடுப்பு நடத்த வேண்டுமா? சாத்தியமானவையைக் கூறுங்கள்; அன்றேல் மக்கள் நகைப்பார்கள்.

ஏழு மாகாணங்களிலும் வாழும் தமிழர்கள் ஈழக் கொள்கையை எதிர்க்கின்ருர்களா? அப்படியாயின் உங்கள் கொள்கை என்ன தமிழ் ஈழமா? அன்றி சிறிலங்காவா?

கடைசியாக ஒன்று கேள்விப்பட்டேன். சவாலுக்கு மேல் சவால்விட்ட நீங்கள், அடலேறு ஆலாலசுந்தரத்தின் சவாலுக்கு எதிர் நிற்க முடியாது பின் கதவால் ஓடுகிறீர்களே! இதுதான உங்கள் வீரம்? நீங்கள் மானமும் களத்தே போட்டு வெறுங்கையோடு யூலை 21ம் திகதி இரவு கொழும்பு கறுவாக்காட்டுக்கு ஓடும் காட்சியை கண்டு ரசிக்க யாழ் தொகுதி மக்கள் ஆவலோடு காத்திருக்கிருர்கள்.

—தெருக்கூத்தன்





பாவியுங்கள்
அன்றும்
இன்றும்
என்றும்

மக்கள் மத்தியில் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் நீலம்
ரோயல் நீலம்
எமது மற்றும் பிரபல தயாரிப்புகள்
ரோயல் ஜெலி கிறிஸ்டல்
ரோயல் கஸ்டட் பவுடர்
ரோயல் பேக்கிங் பவுடர்
ரோயல் கோன் பிளவர்
தயாரித்து விற்பனை செய்பவர்கள்
சிவா இண்டஸ்ட்ரிஸ்
112 -1/3 நாலாம் குறுக்குத்தெரு கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுக்கோட்டை தொகுதி இம்முறை விட்டுக்கொடுக்காது!

## பல்லாயிரம் அதிகப்படியான வாக்குகளால் 'திரு' அங்கு வெற்றிக்கொடி நாட்டுவார்!

1970ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழ் ஈழத்தில் — வடமாகாணத்தில் அனைவரையும் வியப்பில் ஆழ்த்திய அதிசயம் ஒன்று நடந்தது. தானைத் தளபதி அமிர்தலிங்கம் அவர்கள் இத் தொகுதியில் தோல்வியுற்றதைக் கேட்டு நெஞ்சில் நெருப்பு விழுந்ததாக உணர்ந்தனர் தமிழ் மக்கள் அரசியலில் எடுத்தடிவைத்த அன்று தொடக்கம் இன்றுவரை ஓயாது, ஒழியாது, அயராது, அல்லல் தொல்லைகளுக்கு மத்தியில் தமிழ் மக்கள் விடுதலைக்கே தன்னை அர்ப்பணித்த அவரின் தோல்வி தமிழ் மக்கள் அனைவரதும் தோல்வியாகக் கருதப் பட்டது.

இத்தொகுதியில் வெற்றி பெற்றவர், தமிழ் மக்களுக்கு தனித்தமிழ் நாடன்றி விமோசனமில்லை என்று ஒரு காலத்தில் நூல் எழுதி வெளியிட்ட தியாகராவர். இவர் ஆரம்பத்தில் சமசமாஜக்கட்சி ஆதரவாளராகத் திகழ்ந்தார். பின்னர் சுதந்திரத் தமிழ்நாட்டு வீரராகப் பவனி வந்தார். கடந்த தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகராக நின்று வெற்றிபெற்றார். 1970தேர்தல் கடைசிக் கூட்டம் யாழ் முற்றவெளியில் நடந்த போது அதில் பேசிய தியாகராசா 'த. கா. அபேட்சகர்கள் அத்தனை பேரும் வெற்றியீட்டியும் தலைவர் ஜீ. ஜீ. யாழ் தொகுதியில் தோல்வியடைந்தால் நாம் அனைவரும் ராஜினாமாச் செய்வதைத்தவிர வேறு வழியில்லை' என்று முதலைக் கண்ணீர் வடித்தார்.

ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்ததும் அதில் சங்கமமாகி தமிழ் மக்களுக்கு ஆகவேண்டியதைச் செய்வோம் என்றும் வேறு எடுத்துரைத்தார்.

தேர்தலில் ஐ. தே. கட்சி தோற்றது. பாராளுமன்றம் சென்ற தியாகர் ஸ்ரீ. ல. சு. கட்சிஅரசை ஆதரித்துஅதில் சேர்ந்தார் புதிய அரசியல் சாசனம்ஆக்கப்பட்டபோது அதனை ஏற்றுக் கையெழுத்திட்டார். பெரும்பாலான தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் புதிய அரசியல் சாசனத்தை எதிர்க்க யாழ் மாடின், நல்லூர் அருளம்பலம், மட்டுநகர் ராஜன் என்போருடன் இவரும் சேர்ந்து கொண்டார்.

தேர்தல் வருகிறது என்றதும் 'தமிழ் சோசலிச கட்சி'யை தியாகர் அமைப்பதாக பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தது. தேர்லுக்கு அரசு தயாரானதும் இவருக்கு ஸ்ரீ. ல. சு. கட்சி டிக்கட் கிடைத்தது. ஸ்ரீ. ல. சு. கட்சி லேபலில் மக்கள் முன் வரப் பயந்த தியாகராசா சுயேச்சையாகப் போட்டியிடுவதாகக் கூறித் தேர்தலுக்கு நிற்கிறார். இதற்குள் "தமிழ் மக்கள் முன்னணி" என்ற கட்சியின் செயலாளர் என்றும் இவரைப்பற்றி பத்திரிகைச் செய்தியொன்று வெளிவந்தது. பின்னர் இக் கட்சி சார்பிலும் அவர்போட்டியிட முன்வரவில்லை.

நேரத்துக்கு நேரம் கொள்கை மாறும், கட்சி மாறும் பச்சோந்தித் தனத்துக்கு தியாகரியிடம் ஏனைய வேட்பாளர்கள் பிச்சை வாங்க வேண்டும். இந்தக் குத்துக் கரண வீரருடன் புதிய முகமொன்று போட்டியிடுகிறது.

த. வி. கூட்டணி சார்பில் திரு. திருநாவுக்கரசு வட்டுக்கோட்டையில் தியாகரை எதிர்த்துப் போட்டியிடுகிறார்.

ஆழ்ந்த அரசியல் ஞானமும், பரந்த பண்பட்ட ஒழுக்க சீலமும், ஒருவரையும் பொல்லாங்கு சொல்லாத தன்மையும் கொண்டு கடந்த 20 வருடங்களுக்கு மேலாக த. கா. பொருளாளர் பதவியைத் தொடர்ந்து வகித்து வருபவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்பட்டபின் அதன் இணைப்பொருளாளர்களில் ஒருவராகத் திகழ்பவரும், அமரர் ஜீ. ஜீ. யின் அத்தியந்த நண்பருமாக விளங்குபவர்தான் திரு நாவுக்கரசு அவர்கள்.

சட்டக்கல்லூரியில்படித்து தொழிலதிபராகி மீண்டும் சட்டப்படிப்பை முடிக்க எண்ணிய நேரத்தில் திரு அவர்களுக்கு வட்டுக்கோட்டையில் போட்டியிட த. வி. கூ. அழைப்பு விட்டது. மலையாளம் புகையிலை வியாபாரியாகப் பிரசித்தி பெற்றவர் தான் அளவெட்டியில் வசித்த திரு. தாமோதரம் பிள்ளை. அவரின் மகன் திருநாவுக்கரசுவும் தொழிலதிபராகத் திகழ்ந்து வடமாகாணத்தில் எத்தனையோ நல்ல காரியங்களுக்கு வரையாது வழங்கிவரும் வள்ளல். பொதுக் காரியங்களுக்கும், வந்தோரை வரவேற்பதற்கும், புத்தக வெளியீட்டாளர்களுக்கும் அவர் பெரும் பொருள் வழங்கியதை எல்லாரும் அறியமாட்டார்கள்.

கலைஞர் மு. கருணாநிதியின் வழக்கில் அமரர் ஜீ. ஜீ. ஏற்படுவதற்கு முக்கிய பங்கெடுத்தவர் 'திரு' என்பதும் பலருக்குத் தெரியாது.

கிளிநொச்சி த. வி, கூட்டணி வேட்பாளர் திரு. ஆனந்தசங்கரியின் உதவியுடன் அமரர் ஜீ. ஜீ.யை கலைஞர் கருணாநிதியின் வழக்கில் ஏற்பாடு செய்வதற்குத் தக்க ஆலோசனைகளையும், பெரும் பொருளையும் செலவிட்டவர் திரு. என்பது என் போன்றமிகச் சிலருக்கே தெரிந்த் தொன்று.

வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கும், யாழ் வரும் தூது கோஷ்டிகளுக்கும் பணத்தைப் பணம் என்று பாராது விருந்து வைத்துக் கௌரவிப்பவரும் திருதான்.

அமரர் ஜீ.ஜீ. இறந்த பின் அவரது இறுதி ஊர்வலம் முடியும்வரை அயராது உழைத்ததனுல் நோய் வாய்ப்பட்டு, பருத்தித் துறைக் கட்ற்கரையில் ஜீ.ஜீ. யின் சிதைக்கு நெருப்பு வைக்கப்பட்டகையுடன் காங்கேசன்துறை தனியார் மருத்துவமனை வந்து, பல நாட்களாக வைத்தியம் செய்து வந்தபோது ஒரு நாள் அவரை மருத்துவமனையிலேயே சந்தித்தேன்.

முதற் சந்திப்பில், நோய் வாய்ப்பட்டிருந்தும் அரசியல் பிரச்சினைகளை மனம் விட்டு நீண்ட நாள் பழகிய ஒருவருடன் பேசுவது போல் பேசினார். அன்று அவரிடம் சில சந்தேகங்களைக் கேட்டேன்.

"நீங்கள் காங்கேசன் துறைத்தொகுதிக்கு த. கா. வேட்பாளராக நிற்க முடிவு செய்துள்ளதாகப் பேச்சு அடிபடுகிறதே என்றேன்.

'யார்சொன்னது? செல்வா இருக்கும் போது நான் எப்படி போட்டியிட விரும்புவது" என்றார் திரு.

குமார் பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிட முன் வந்திருக்கிறாரே என்றேன்.

"குமார் த. கா. கட்சிக்கு இதுவரை எதுவும் தெரிவிக்கவில்லை. த. வி. கூட்டணி ஒன்று ஏற்பட்ட பின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு நாம் இடம் கொடுக்கக் கூடாதென்றார் திரு.

"அமிர் அண்ணை காங்கேசன்துறையில் போட்டியிட முன்வந்தால் தங்கள் நிலை என்ன" என்றேன்.



"அமிரின் வெற்றிக்காக முழு மூச்சாக வேலை செய்வேன். எனக்கென்று தனிப்பட்ட தேர்தல் ஆசை எதுவும் இல்லை. கூட்டணியின் ஒற்றுமைதான் முக்கியம்" என்றார்.

"குமாருக்கு இடம் கொடுக்கவில்லையானல் த. கா. கூட்டணியை விட்டுப் பிரிந்து விடுமா?" என்றேன். "தனிப்பட்ட ஒருவருக்காக கூட்டணியைஉடைப்பதற்கு நாமோ திரு. சிவாவோஉடன் படமாட்டோம்" என்று அடித்துச் சொன்னார் திரு.

பாராளுமன்றம் கலைக்கு முன் இச்சம்பாஷணை நடந்தது. அதன்பின் ஏற்பட்ட சலசலப்புகளுக்கு மத்தியில் திருவின் பெயர் வட்டுக் கோட்டைக்குச் சிபார்சு செய்யப்பட்டது.

வட்டுக்கோட்டைக்குப் புதியவரே திரு என்றனர் பலர். ஆனல் திருவின் உறவினர் பலர் காரை நகரைச் சேர்ந்தவர்கள் என்பதும், திருவின் மனைவி ஒரு சட்டத்தரணி (அட்வகேற்) சங்கானையில் பிறந்து வளர்ந்தவரென்பதும் இப்பொழுது தான் அவர்களுக்குத் தெரிகிறது. வட்டுக்கோட்டையில் தியாகரின் ஆட்டம் உதயசூரியன் முன் பனி போல முற்று முழுதாக உருகிப் போய்விட்டதென்பதை ஜூலை 21ல் மக்கள் அறிவர்.

— புத்தொளி

## குத்துக்கரண..

—2-ம் பக்கத்தொடர்

தலாவலை இதுகாறும் செய்தவைகள் அனைத்தையும் ஏற்று இனிமேலும் செய்யப்போகின்றவைகளையும் ஏற்போம் என்று திர்ப்பளிப்பதேயாகும் வெற்றி பெற்றால்—உடனே கொத்தலாவலையிடம் குமாரசாமி போய்ச் சேருவார்.''

இது தமது சீடராக இருந்த குமாரசாமியைப் பற்றி அமரர் ஜீ. ஜீ. அன்று கூறியிருந்த தீர்க்கதரிசனமான கூற்றாகும்.

1956ம் ஆண்டு தோற்கடிக்கப்பட்ட திரு. குமாரசாமி தொடர்ந்து வந்த ஒவ்வொரு தேர்தலிலும், ஒவ்வொரு வேடத்தில் தோன்றினலும், சாவகச்சேரி தொகுதி மக்கள், அவரை நன்கு அடையாளம் கண்டு தோற்கடித்து வந்திருக்கிறார்கள். ஏனெனில் குமாரசாமி ஒருகுத்துக் கரண வீரா எனபதும்நேரத்துக்குநேரம் கட்சிமாறும்ஒரு பச்சோந்தியென்பதும் அவர்களுக்குத் தெரியும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி நியமனசபையில் ஓர் உறுப்பினரான செயலதிபர் மூ.சிவசிதம்பரம் அவர்களிடம்— தொலைபேசியில் தொடர்புகொண்டு "நவரத்தினம் கேட்கவில்லையாமே; அப்படியானல், கூட்டணியின் சார்பில் சாவகச்சேரி தொகுதிக்கு என்னைப்போடுங்களேன்" என்று வேண்டுகோள் விடுத்த குமாரசாமிதான் இப்போது, கூட்டணி தனக்கு 'டிக்கட்' தராததால், கூட்டணியை எதிர்த்து குய்யோ முறையோஎன்று ஒப்பாரி வைக்கிறார்!

போட்டியிட கட்சியேதும் கிடைக்காததால், 'தமிழ்ஈழ ஜீ. ஜீ. காங்கிரஸ்' என்ற முகமூடியுடன், சுயஇச்சையாக வந்திருக்கிறார் குமாரசாமி. இந்தக் குத்துக்கரணவீரரின் கட்டுப்பணம்கூட இம்முறை எஞ்சப்போவதில்லை; கடமை வீரர் நவரத்தினம் பெரு வெற்றியடையப்போவது உறுதி. உதயசூரியனின் முன்னல் மின்மினிகள் எம்மாத்திரம்?

### குமாரசாமிக்கு யூ.என்.பி. ஆதரவு!

'தமிழ் ஈழ காங்கிரஸ்' என்ற பெயரில் சுய இச்சையாகப் போட்டியிடும் குமாரசாமிக்கு ஆதரவாக சாவகச்சேரித் தொகுதி ஐ. தே. கட்சிக்கிளை உதவியமைப்பாளர் என்று தம்மைக்கூறிக்கொள்ளும் ஏ. தில்லைநாதன் என்பவர் இப்போது பிரசாரம் செய்துவருகிறார். திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் உத்தரவின்பேரில்தான் இவ்வாறு தாம் குமாரசாமிக்கு ஆதரவு திரட்டுவதாக அவர் கூறித்திரிகிறார்.

இதன் பின்னணியென்ன? தப்பித்தவறி வெற்றிபெற்றால்- ஆட்சியமைக்கக் கனவுகாணும் யூ.என்.பி.யுடன் சேர்ந்து மீண்டும் அரை மந்திரி பதவிபெறலாம் என்ற நப்பாசைதானே?

— ஈழதாசன்


## மில்க்வைற் செய்தி-இதழ் 19

10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மில்க்வைற் மெடிக்கேட்டட்சோப் அல்லது 2 பார் சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி செய்தியை பெற்றுக் கொள்ளுங்கள்.

விநியோகப்பகுதி:

மில்க்வைற் சவர்க்கார தொழிலகம்,
த. பெ. எண். 77
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி...

—1-ம் பக்கத் தொடர்

வாணவேடிக்கைகளை முற்றுகப் பகிஷ்கரித்தனர். கிளிநொச்சி நகரத்தில் கடைகள் அனைத்தும் மூடப்பட்டுக் கிடந்தன; அத்துடன் வழமையாக சனிக்கிழமைகளில் கூடும் சந்தை பகிஷ்கரிப்பு காரணமாக 2-7-77 சனிக்கிழமை கூடவில்லை; 4-7-77 திங்களன்றே கூடியது. பகிஷ்கரிப்பு நூறு வீதம் வெற்றி பெற்றது; மக்கள் சூரியர் முகத்தில் கரிபூசினர்.

இதையொட்டி திரு. ஆனந்தசங்கரி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் பின்வருமாறு தெரிவித்திருந்தார்:-

“கிளிநொச்சி நகரத்துக்கென ஒரு நகர மண்டபத்தை அமைக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்த கிளிநொச்சி பட்டின சபை தமிழ்க் கலை, கலாசாரத்துக்கு அமைய ஒரு கட்டிடத்தை அமைக்க எண்ணி 15,000/- ரூபா செலவில் கட்டிடக் கலைஞர் துரைராசா அவர்களின் வரைபடம் ஒன்றைப் பெற்று 5 லட்சம் ரூபாவுக்கு குறைந்த செலவில் கட்ட ஒப்பந்தம் செய்து கொண்டது நீங்கள் அறிந்ததே. திடீரென எக்காரணமுமின்றி பொதுமக்களால் தெரிவுசெய்யப்பட்ட சபை கலைக்கப்பட்டு தபால் அமைச்சில் உயர்பதவி வகிக்கின்ற ஒரு சிங்களவர் நகர சபையைப் பரிபாலிப்பதற்கு விசேட ஆணையாளராக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டார்.

“முழுத் தமிழ்ப் பிரதேசமான கிளிநொச்சிப் பட்டினத்தை பரிபாலிக்க ஒரு தமிழர் நியமிக்கப்படாதது தமிழ் மக்களை அரசாங்கம் எவ்வளவு தூரம் மதிக்கிறது என்பதை தெளிவாகக் காட்டுகிறது. திரு. பேட்டி சில்வா என அழைக்கப்படும் இவ் ஆணையாளர் ஏற்கனவே மக்களால் ‘தெரிவுசெய்யப்பட்ட, பட்டின சபை நிர்வாகத்தால் நகர மண்டபம் கட்ட செய்யப்பட்ட ஒப்பந்தத்தை ரத்துச்செய்து ஒப்பந்தக்காரருக்கு நஷ்டஈடும், பொதுமக்கள் பணத்தில் வழங்கி ஏறத்தாழ 85,000/- ரூபாவுக்கு ஒரு புதிய வரைபடத்தை சிங்கள கலை, கலாச்சாரத்தில் ஊறித்திளைத்த ஒரு சிங்கள கட்டிடக் கலைஞரிடம் பெற்று ஏறத்தாழ 11 லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ளதே சிங்களப் பன்சாலை போல் காட்சியளிக்கும் புதிய நகர மண்டபமும் மக்கள் சந்தையும் ஆகும்.”

## உடுப்பிட்டியில் ...

—1-ம் பக்கத் தொடர்

றிய அக்கறையின்றி சாதியையும், தீண்டாமையையும் ஒழிப்பதே எமது இலட்சியம்; இந்நிலையில் தேர்தலுக்கு முன்னுல் — இடையிலே இருக்கின்ற சில காட்களுக்குள் — சிறுபான்மைத் தமிழர் குறைகளை போக்க நடவடிக்கையெடுப்பீர்களா என்று கேட்பது விஷமத்தனமானது. கூட்டணி சார்பில் “சமூக புனரமைப்பு குழு” என்று திரு. க. ஜெயக்கொடி தலைமையில் இயங்குகிறது. அந்தக் குழுவுக்கு பிரச்சினைகளை தெரியப்படுத்தினுல், அக்குழு இரு பகுதியினரையும் அழைத்துப்பேசி பிரச்சினைகளையும் சமரசமாகத் தீர்த்து வைக்கதயாராக இருக்கிறது”—என்ருர்.

### இராசலிங்கத்துக்கு ஆதரவு!

திரு. இராசலிங்கம், ஏறத்தாழ 100 இளைஞர்கள் சகிதம் கடந்த 3-7-77ல் வல்வெட்டிதுறைப்பகுதியில்சட்டத்தரணி திரு. கே. பொன்னையாவுடன் வீடுவீடாகச் சென்று வாக்குகளைகோரினுர். அப்போது நடைபெற்ற ஒரு சம்பவம் உள்ளத்தை உருக்கியது.

பெரும்பான்மை சமூகத்தவர் ஒருவர் வீட்டுக்கு திரு. இராசலிங்கம் சென்ற போது, அங்கிருந்த வீட்டுத் தலைவர் திரு. இராசலிங்கத்தை வரவேற்று, தேநீர் வழங்கியதுடன், இராசலிங்கம் தேநீர் குடித்துக்கொண்டிருந்தபோது இடையிலே அதைப்பறித்து, இராசலிங்கம் குடித்த மீதித்தேனீரை தான் பருகினுர். அத்துடன், “இனிமேல் சாதி, தீண்டாமை எதுவும் இல்லை; நாம் தமிழர்கள் ஒன்ருகிவிட்டோம்; இராசலிங்கம் வெற்றி நிச்சயம்; ஆனுல் வெற்றிபெறும் இராசலிங்கம் கூட்டணிக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும்” என்று உணர்ச்சி பொங்கக் கூறியபோது. இராசலிங்கமும் உணர்ச்சி வசப்பட்டு, அந்த இல்லத்தலைவரை அப்படியே கட்டியணைத்து நிச்சயம் நான் கூட்டணியின் ஆணைக்கு கட்டுப்பட்டு நடப்பேன் என்று கண்களில் நீர்பொங்கஉறுதியளித்தார்

3-வது வாரம்

செல்லமகால்

ஜெய்ந்திரா மூவிஸ்

காத்திருப்பேன் உனக்காக

ஒளிப்பதிவு:
எஸ். தேவேந்ரா

டைரக்ஷன்
எஸ். வி. சந்திரன்

றீகல் நுவரெலியா கடைசி சில தினங்கள்

எம். ஜி. ஆர். நடித்த—

இதயக்கனி

கெயிட்டி 2-வது வாரம்

எஸ். எஸ். ஆர்.

— நடித்த —

அவன் பித்தனு

15-ம் திகதி முதல்

நீ ஒரு மகாராணி

றீகல் (மட்டுநகர்) கடைசி வாரம்

ரவிச்சந்திரன் சௌகார் ஜானகி நடித்த-

சொர்க்கத்தில் திருமணம்

கிங்ஸ்லி 2-வது வாரம்

ரஞ்சன், அஞ்சலிதேவி

நடித்த

நீலமலைத் திருடன்

(புதிய கொப்பி)

பிளாசா

காத்திருப்பேன் உனக்காக

15-ம் திகதி முதல்

சுஜாதா, ஜெய்சங்கர் நடித்த-

நீ ஒரு மகாராணி

கெப்பிட்டல்

குலதெய்வம்

வெலிங்டன் (யாழ் நகர்)

15-ம் திகதி முதல்

தாயில்லாக் குழந்தை

(கலர்)

லிடோ (யாழ்நகர்)

15-ம் திகதி முதல்

நீ ஒரு மகாராணி

இப்பத்திரிகை கிரேசன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு-13, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1977-ம் வருடம் ஜூலை மாதம் 10-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org